# கர்மமும்! ஞானமும்!



ப்ரக்ஞன்

# கர்மமும்!

# ஞானமும்!

ஆக்கம்

**ப்ரக்ஞன்**

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கர்மமும்! ஞானமும்! |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞுன் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | வேதாந்தம் |
| முதற்பதிப்பு | : | 2018 |
| இரண்டாம் பதிப்பு | : | 2023 |
| பக்கங்கள் | : | 93 |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அகவிழிப்பு |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சிருஷ்டியின் தொடக்கம் | 5 |
| 2 | வேதத்தின் அவசியம் | 9 |
| 3 | கர்மகாண்டத்தில் ஆர்வம் | 12 |
| 4 | புதிய மதங்கள் தோன்றுதல் | 17 |
| 5 | ஆதி சங்கரரின் வருகை | 21 |
| 6 | வேதத்தில் கர்மத்தை கண்டித்தல் | 28 |
| 7 | பக்தியின் அவசியம் | 32 |
| 8 | அறியாமையின் வெளிப்பாடு | 35 |
| 9 | எப்படி அணுகவேண்டும்? | 39 |
| 10 | ஞானமும், ஞானியும் | 42 |
| 11 | தர்மத்தை அறியாதது | 46 |
| 12 | வேதத்தை பார்க்கும் பார்வை | 49 |
| 13 | ஸ்ருதி மற்றும் ஸ்மிருதி | 52 |
| 14 | கர்மத்தில் ஞானம் அவசியம் | 57 |
| 15 | தேவதைகளும் ஞானியும் | 62 |
| 16 | நான்கு வேதங்கள் | 72 |

## 1. சிருஷ்டியின் தொடக்கம்

அப்போது அசத் இருக்கவில்லை, சத்தும் இருக்க வில்லை, உலகம் இருக்கவில்லை, அதற்கப்பால் வானமும் இருக்க வில்லை. அப்போது இரவு, பகல் இல்லை. ஒன்றேயான அதுமட்டும், தன் அகச்சக்தியினால் மூச்சுவிட்டது. அதுவன்றி ஏதுமிருக்கவில்லை

இருட்டால் போர்த்தப்பட்ட வெட்டவெளி வேறுபடுத்தல் இன்மையால், அதாவது, ஒன்றுமே இல்லாத சூன்யமாக இருந்தமையால், அதில் எந்தவித சலனமும் இன்றி, வெறுமையால் மூடப்பட்டிருந்தது. அது, தன் முடிவற்ற தவத்தால் சத்தாக இருப்பு கொண்டிருந்தது. அந்த ஒன்றுமற்ற ஒருமையில் முதன் முதலில் மஹத் என்ற இச்சை பிறந்தது. பின்னர், அதுவே அனைத்திற்குமான பீஜம் (விதை) ஆகியது.

அவ்வாறாக, அசத் என்ற இந்த பிரபஞ்சமும், பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற அனைத்தும் உருவாயிற்று!.

அதன் மூலக்காரணம் என்ன?

தேவர்களோ சிருஷ்டிக்குப் பின்னர் வந்தவர்கள்!

அப்படியானால் அது எப்படிப்பிறந்தது?

யாருக்குத்தெரியும் அது?

அதை யார் உண்டு பண்ணினார்கள்? அல்லது உண்டு பண்ணவில்லை?

ஆகாய வடிவான அதுவே அறியும் அல்லது அதுவும் அறியாது.

– சிருஷ்டியைப்பற்றி ரிக்வேதம்.

ஆதியில் அந்த சத் ஒன்று மட்டுமே இருந்தது. அது தனித்து இருந்துக் கொண்டு, தன்னிடமிருந்தே இந்த அனைத்தையும் படைத்தது.

இருண்ட உலகம், அடர்ந்த காடுகள், நீர் நிலைகள், அதன் மத்தியிலே ஆங்காங்கே அனேக ஜந்துக்கள் காணப்பட்டன. ஒரு நாள் பெய்த மழையில் பல காளான்கள் முளைப்பது போன்று, திடிரென்று ஒரு மாலைப்பொழுதில் இலட்சக்கணக்கான ஈசல் பூச்சிகள் பூமிக்கு அடியில் இருந்து உயிர் பெற்று வெளிவருகின்றதைப் போன்று, பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவைகளின் சேர்க்கையினால், உயிர்கள் உடல் எடுத்து தோன்ற ஆரம்பித்தன.

அந்த உடல்களினால் வெளிவந்த உயிர்களிலேயே சிறப்பான உயிரினமாக மனிதன் காணப்பட்டான்.

ஒரு பொருளைப் படைக்கின்ற ஆற்றலும், பேரறிவும் கொண்டவன், அந்தப் பொருளை நுகர்கின்ற நுகர்வோர்கள் அதைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே அதைச் சரியாக கையாள முடியும். இல்லையேல், அந்தப் பொருளை எப்படி கையாளுவது அல்லது பயன்படுத்துவது என்ற அறிவு இன்றி அதைக் கெடுத்து விடுவார்கள்.

அதனால், அந்தப் பொருளைத் தயாரித்த நிறுவனமே, அந்தப் பொருளை பெற்ற நுகர்வோர் அதை எப்படிக்கையாள வேண்டும் என்பதை, அறிவிக்கும் ஒரு அறிவுப்புத்தகமாக அந்தப் பொருளுடனேயே “கையாளும் கையேடு” (Operating Manual) என்ற ஒரு புத்தகத்தை இணைத்திருக்கும்.

அந்த பொருளை நுகர்ந்தவன் அந்த கையேட்டினைப் படித்து, அதில் கூறப்பட்ட விளக்கங்களை அறிந்துக் கொண்டு, அந்த பொருளை பயன்படுத்தினான் என்றால், அந்தப் பொருள் நன்றாகச் செயல்படும். நீண்ட நாட்களும் உழைக்கும்.

இந்தப்பாணியை, எல்லாம் வல்ல அந்த சத்திய வஸ்து, அன்றே இந்த உலகைப்படைக்கும் பொழுதே, உலகத்தைக் கையாளும் கையேடாக “வேதம்” என்ற புத்தகத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தியது.

அப்படி, அந்த சத் என்ற வஸ்துவினால் மனிதனுக்காக கொடுக்கப்பட்ட வேதங்களை “அனந்தா வை வேதா:” – என்று பலவேதங்களாக இருந்ததை பண்டைய ரிஷிகள் சிலவற்றைத்தான் நமக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

அவற்றின் ஒட்டுமொத்த வேதங்கள் நாளடைவில் சிதைந்து, இன்று நம்முடைய புற உலகியல் வாழ்க்கைக்கும், அக உலகியல் வாழ்க்கைக்கும் நமக்குக் கிடைத்தது நான்கு வேதங்களாக பிரிக்கப்பட்ட ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்பனவாகும்.

இவ்வாறு பிரித்து எளிமைப்படுத்திக் கொடுக்கப்பட்ட நான்கு வேதங்களுக்கு மேலாக, ஆதியில் உள்ள அத்தனை வேதங்களையும் நாம் அறிந்துக்கொண்டு பிரம்மாவைப் போன்று இந்த பிரபஞ்சங்களை சிருஷ்டி செய்யப் போகின்றோமா என்ன? அவசியமுமில்லை! முழு வேதக் களஞ்சியங்களும் தற்போது இல்லை.

## 2. வேதத்தின் அவசியம்

சிருஷ்டிக்கப்பட்ட இந்த பிரபஞ்சத்தில் ஒரு பகுதியில் இருக்கின்ற, ஒரு சூரிய மண்டலத்தில், அந்த சூரியனைச் சார்ந்து சுற்றிக் கொண்டிருக்கின்ற, கோள்களின் வட்டப்பாதையில் உள்ள இந்த பூமி என்ற உலகம் நன்றாக இருக்கச் செய்வதற்காக, அதில் வசிக்கின்ற மனிதர்களாகிய நாம் மட்டுமே இந்த வேதங்களைப்பற்றி தெரிந்துக் கொள்ள முடியும்.

காரணம், இந்த வேதம் மனிதனுக்காக மட்டுமே படைக்கப்பட்டது. இதன் மகத்துவம் மனிதனைத் தவிர வேறு எந்த ஜீவராசிகளாலும் அறியவும் முடியாது. அதற்கேற்ற அறிவு அவைகளுக்கு கொடுக்கப்படவும் இல்லை.

அதனால், இந்த வேதத்தை அறியக்கூடிய ஆறாவது அறிவைக் கொண்ட மனிதனே உயர்வானவன் ஆகின்றான்.

அப்படி, இந்த சிருஷ்டியை கொடுத்த, சிருஷ்டி கர்த்தாவையும், சிருஷ்டியையும் அறிய வேண்டுமானால், அது வேதம் என்ற உயர்ந்த அறிவுப் புத்தகத்தின் வாயிலாக மட்டுமே அறிய முடியும்.

இவ்வாறு கிடைத்த வேதங்களை நன்றாக கற்றறிந்து, நான்கு வேதங்களாகத் தொகுத்து நம்முடைய ரிஷிகள் நமக்குத் தந்திருக்கிறார்கள். அதில் ஒவ்வொன்றிலும் பலவிதமான பாடங்கள், பாடபேதங்கள் உள்ளன.

பாடாந்தரம் என்று இதைக்கூறுவார்கள். அதாவது, செய்யுள்களாக இந்த வேத மந்திரங்கள் காணப்படுகின்றன.

இந்த பூ உலகிலேயே மிகப்பழமையான நூல் ஒன்று உண்டென்றால், அது, வேதநூல் மட்டுமே ஆகும்.

வேதங்கள் யாராலும் எழுதப்பட்டவை அல்ல. சாட்சாத் அந்த சர்வேஸ்வரனால் வழங்கப்பட்டவை.

அப்படிப்பட்ட இந்த உயர் வேதமந்திரங்களை ரிஷிகள் தங்களின் தவ வலிமையினால், அனுபூதியில் கண்டு, அதை பாடல்களாகப் பாடி, ஒருவருக்கு ஒருவர் மனனம் செய்து வந்தனர்.

அதாவது, பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மொழித்தோன்றியவுடன், அந்த மொழியின் பேச்சு வழக்கில் பாடப்பட்ட மந்திரங்களாக இந்த வேதங்கள் போற்றப்படுகின்றன.

நாளடைவில் எழுத்துக்கள் எழுதப்பழகியவுடன், இந்த வேத மந்திரங்களை ஒலைச்சுவடிகளில் எழுதியும் வைத்தனர்.

அதன்பிறகு, மனித வாழ்வின் புருஷார்த்தங்களை எளிதாக அடைய, அந்த வேதத்தின் முற்பகுதிகளை கர்ம காண்டமாகவும், பிற்பகுதிகளை ஞான காண்டமாகவும் வைத்துக் கொண்டனர்.

அதாவது, அறம், பொருள், இன்பம் என்ற இந்த மூன்றை அடைய வேதத்தின் கர்மகாண்டத்தை கற்று அறிய வேண்டும் என்றும், அதன்பிறகு மனிதனின் இறுதி இலட்சியமான மோக்ஷத்தை (வீடுபேறு) அறிய, இதே வேதத்தின் இறுதிப் பகுதியான ஞானகாண்டத்தை கற்று அறிய வேண்டும் என்றும் முறைப் படுத்தினர்.

## 3. கர்மகாண்டத்தில் ஆர்வம்

இப்படித் தோன்றிய ஆதிமனிதன் நாகரிகத்தின் பயணத்தில், ஆரம்ப காலத்திலேயே இந்த வேதமந்திரங்களை அறிந்து, அதன் வாயிலாக தன்னை அறிந்து கொள்ளட்டும் என்று அந்த பரம்பொருளால் கொடுத்த அறிவைக்கொண்டு, அந்த அழியாப் பரம்பொருளை அறியாமல், தனக்கு கொடுக்கப்பட்ட அறிவினாலே அழியக்கூடிய அற்பமான பொருளைத் தேடி அஹங்காரத்தை அடைந்து விட்டான் இன்றைய மனிதன்.

அந்த அஹங்காரத்தின் வெளிப்பாடாக தன்னுள்ளே இருக்கின்ற அந்த பரம்பொருளை தேடாமல், தனக்கு வெளியே இருக்கின்ற அற்ப பொருட்களைத் தேட ஆரம்பித்து விட்டான்.

அதன் விளைவாக, அதே வேதத்தில் கொடுக்கப்பட்ட கர்ம காண்டத்திற்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்து, இதன் உண்மைத்தன்மையை அறியாத சிலர் புருஷார் தங்களில் உள்ள அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டுமே பிரதானமாக எடுத்துக் கொண்டு, அனேக யாக, யக்ஞங்களை செய்து, தேவதைகளை திருப்திப்படுத்தி, அதன்

பலனாக தங்களுக்குத் தேவையானவற்றை அடைந்து, அந்த அற்ப சுகத்தில் தங்கள் வாழ் நாட்களை கழித்து, இந்த அரிதான மனித தேகத்தில் வந்ததின் நோக்கம் அறியாமல் பிறவிச் சக்கரத்தில் இன்றுவரை சுற்றிக் கொண்டுள்ளனர்.

இவர்களைப் போன்றே அறியாமையில், இவர்களின் வழித்தோன்றல்களாக வந்த பலரும் அதே வேதத்தில் கூறப்பட்டுள்ள வேதத்தின் இறுதிப்பகுதிகளான ஞானகாண்டத்தை – வீடுபேறு அடையும் வழியை கற்க விரும்பாமல், முற்பகுதிகளான கர்ம காண்டத்தை மட்டுமே கற்றுக் கொண்டு, யாக, யக்ஞங்கள் செய்து, தங்கள் வாழ்க்கையை சுய நலமாக வாழ விரும்பி, தங்கள் அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த வேத மந்திரங்களின் மகத்துவம் அறியாத ஒரு சிலரின் தவறான இந்த போக்கினால், இந்த, இந்த வேத மந்திரங்களை கூறுவதினால், இந்த இந்த தேவதைகளின் அனுக்கிரஹம் கிடைக்கும் என்றும், அந்த தேவதைக்கு உரிய யாக யக்ஞங்கள் செய்து ஹவிர்பாகம் கொடுத்தால், அதன் பலனாக பொன்னும், பொருளும், ஆரோக்கியமும் உண்டாகும் என்றும் ஆசை வார்த்தைகளைக் கூறி, ஆருடம் பார்த்து, அற்ப பணத்திற்காகவும், பகட்டிற்காகவும் இந்த வேத மந்திரங்களை கற்று, அந்த மந்திரங்களின் பொருள் அறியாமலேயே

அத்தகைய யாக, யக்ஞங்களை செய்து, தங்கள் அஞ்ஞான வாழ்க்கையை வாழ ஆசைப்படுகின்றனர்.

ஆசையினால் ஆட்கொண்ட மற்ற மனிதர்களும், அந்த வேதத்தில் கூறப்பட்ட மந்திரங்களின் மகத்துவத்தை அறியாமல், இவர்களைக் கொண்டே யாக, யக்ஞங்களை செய்து தங்களுக்குத் தேவையான சுயநலக்காரியங்களை சாதித்தும் கொள்கின்றனர்.

வேதத்தில் கொடுக்கப்பட்ட கர்மகாண்டத்தின் முக்கிய நோக்கமே, பொது நலன் கருதி, இந்த உலக நன்மைக்காகவும், அமைதிக்காகவும், மனிதனின் வாழ்வியல் ஆதாரங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று, மற்றும் ஆகாயம் போன்றவைகளை இந்த வேத மந்திரங்களால் வழிபட்டு, அதன் பலனாக மனிதன் உயிர் வாழ, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற அத்தியாவசியத் தேவைகளை கொடுக்கின்ற அந்த பஞ்ச பூதங்களுக்கு நன்றி கூறும் பொருட்டு, அந்த தேவதைகளுக்கு வழிபாடு செய்ய யாக, யக்ஞங்கள் செய்ய வேண்டும்.

அதைவிடுத்து. தன்னுடைய குடும்பத்திற்கு மட்டும் பொன்னும், பொருளும் வேண்டும் என்றும், தனக்கு மட்டும் ஆரோக்கியம் வேண்டும் என்றும், தன்னுடைய ஆயுள் மட்டும் கூட வேண்டும் என்றும், தன்னுடைய தொழில் மட்டும் நன்றாக நடக்க வேண்டும் என்றும் பல விதமான சுய நல

வழிபாடுகளுக்கு இந்த சுயநலமான மக்கள் இந்த வைதீக தர்மத்தை அறியாதவர்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அவ்வாறு சுயநலமாக வருகின்றவர்களுக்கு இந்த வேதத்தைக் கற்றறிந்தவர்கள், தாங்கள் கூறுவது போன்று சுயநல வழிபாட்டிற்காக இந்த வேதம் மற்றும் வேத மந்திரங்கள் கொடுக்கப்படவில்லை. இதன் நோக்கம், அந்த சர்வேஸ்வரனால், படைக்கப்பட்ட நீங்களும், நானும் முதற்கொண்டு அனைத்து உயிர்களும், நலமுடனும், சந்தோசத்துடனும், சாந்தமான மனநிலையிலும் வாழ்வதற்காகக் கொடுக்கப்பட்டது என்று கூறுவார்களா என்றால், இல்லவே இல்லை!.

இவர்களும் தங்கள் சுய நலத்திற்காக அந்த வேத மந்திரங்களை சமஸ்கிருதத்தில் அந்த மந்திரத்தின் பொருள் தெரியாமலேயே கற்று, அதன் பிறகு, அதனை தமிழ் மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட புத்தகங்களின் வாயிலாக ஓதி அந்த யாக யக்ஞங்களை செய்வதினால், என்ன பலனை இவர்கள் அடைந்தார்கள் என்று தெரியவில்லை?

இந்த வைதீக மதத்தைச் சார்ந்த இந்த மக்கள் சர்வேஸ்வரனால் கொடுக்கப்பட்ட வேதத்தின் மீதும், வேத மந்திரத்தின் மீதும் சிறிதும் பயமின்றி, மாற்று மதத்தினர்கள் அனேக பாவங்களைச் செய்துவிட்டு, கடைசியில் கோயிலுக்குச் (சர்ச்சுக்கு) சென்று பாவ மன்னிப்பு பெறுவதுப்போல,

இவர்களும், தவறான யாகங்களை, தவறான மந்திர உச்சரிப்புக்களை கூறி யாக, யக்ஞங்கள் செய்து விட்டு, அதன் இறுதியில் மந்திரஹீனம், தந்திரஹீனம், க்ரியாஹீனம், பக்திஹீனம் என்று, எந்த பூஜைகளைச் செய்தாலும் கடைசியில் செய்தவற்றில் ஏதும் பிழை இருந்தால் மன்னிக்கும்படி பிரார்த்தனை செய்யும் மந்திரங்களைக் கூறி பாவமன்னிப்பும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

இப்படிப்பட்ட இவர்களைப் போன்றவர்கள் தங்களது சுய நலத்திற்காக யாக, யக்ஞங்களை செய்து, தீயவர்களையும், தீய காரியங்களையும் ஆதரிக்கின்றனர். அதன்விளைவு, அனைத்து உயிர்களும் நலமுடன் வாழ இறைவனின் கொடையாக கொடுக்கப்பட்ட பஞ்ச பூதங்களின் கோபத்திற்கு ஆளாகி, இன்றைய இயற்கைச் சீற்றங்களைக் காண முடிகின்றது.

இத்தகைய சுயநல மனபோக்கினால், இவர்களும், இவர்களைச் சார்ந்தவர்களும் மட்டும் பாதிப்புக்களை அடையாமல், இந்த புவியில் உள்ள அனேக ஜீவராசிகள் துன்பத்திற்கு ஆளாகின்றன.

அதாவது, எந்த யாக, யக்ஞங்களை பொதுநலன் கருதி செய்யும் பொழுது, இந்த புவியில் உள்ள அனேக ஜீவராசிகள் நன்மைகளை அடைகின்றதோ, அதைப் போன்றே, இந்த யாக, யக்ஞங்களை சுயநலன் கருதி செய்யும் பொழுது, இந்த புவியில் உள்ள அனேக ஜீவராசிகள் தீமைகளையும் அடைகின்றது.

## 4. புதிய மதங்கள் தோன்றுதல்

இத்தகைய மனிதர்களின் மனம், சுய நலமாக மாறிய நடைமுறையையே கடந்த பல நூற்றாண்டுகளில் அதிக ஆதிக்கம் கொண்டு இருந்ததைக் கண்ட அன்றைய தத்துவ ஞானிகள் இந்த வைதீக மதத்தினரை பலமாக எதிர்த்தனர்.

அதன் விளைவாக தோன்றிய மஹான்களின் வரிசையில் புத்தர், மகாவீரர், போன்றவர்கள் இந்த வேதங்களில் கூறப்பட்ட கர்ம காண்டங்களை கண்டனம் செய்தனர்.

இதனால், இந்த கண்டனத்திற்கு ஆதரவான ஒரு சாரர், இந்த வைதீக மதத்திற்கு எதிராக போராடி, அந்த வேதத்தில் உள்ள இறுதிப்பகுதியான ஞானகாண்டத்தை அறியாமலும், அந்த இறைவனை அறிய விரும்பாமலும், ஒட்டுமொத்தமாக இந்த வேதத்தை ஏற்கவிரும்பாத மனநிலையில் புத்தமதம், சமணமதம், கிஸ்துவமதம், இஸ்லாமிய மதம் போன்ற புதிய மதங்களை உண்டாக்கிக்கொண்டு, இந்த வேதத்திற்கும், வைதீக மதத்திற்கும் எதிராக புதிய மதங்களுக்கு மதம் மாறிவிட்டனர்.

இவர்களுக்கு எதிராக வேதத்தை மிகவும் விரும்பிய ஒரு சாரர் அதிலே கர்ம காண்டத்தை ஆதரிக்கின்ற குழுவாகவும், ஞான காண்டத்தை ஆதரிக்கின்ற மற்றொரு குழுவாகவும், என இரண்டு பிரிவுகளாக பிரிந்தனர்.

இந்த இரண்டையும் ஆதரிக்கின்ற குழுவாக ஒரு சாரரும் என நாளடைவில் அத்தனைத் தனித்தனி குழுக்களும், அவரவர்களுக்கு விருப்பமான வழிமுறைகளாக இந்த வேதத்தை பிரித்து, மீமாசம், வைசேஷிகம், அளவை, சாங்கியம், நியாயம், வேதாந்தம், சித்தாந்தம் போன்ற பல பிரிவுகளில் புதிய மதங்களாக, பல மதங்கள் இந்த பாரதத்தில் தோன்றின.



இந்த மதம், மாற்றங்கலெல்லாம் அவ்வளவு எளிதில் உடனடியாக ஓரிரு வருடங்களில் நடந்தேறவில்லை. பல நூற்றாண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைக் கொன்று குவித்து, அந்த பிணங்களின் குவியல்களை புதைத்த, இதே பாரத மண்ணில் பிறந்த புதிய மனிதர்களினால் உண்டானவை.

இப்படி இந்த அனைத்து மதங்களும் தோன்றக் காரணமாக இருந்தது வேதம் என்ற ஒன்றே ஒன்றினால் மட்டுமே என்றால் அது மிகையாகாது.

இப்படி வேதத்தின் கர்மகாண்டத்தை மட்டுமே எடுத்துக் கொள்வது தவறு, அதன் இறுதிப்பகுதியான ஞான காண்டத்தையும் எடுத்துக் கொண்டு அறம் பொருள், இன்பம் இவற்றுடன் வீடுபேறும் அடையுங்கள் என்று கூற வந்த ஞானிகளையும் புரிந்து கொள்ள முடியாத சூழலில், இந்த புதிய மதங்கள் தோன்றக் காரணமாக அமைந்தன.

வேதத்தில் ஆரம்பத்தில் கர்மகாண்டத்தில் என்ன, என்ன காரியங்களை எல்லாம் கூறியிருக்கின்றதோ, அவைகளை எல்லாம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை, என்று வேதத்தின் இறுதிப்பகுதி கூறுகின்றது.

அதே வேதத்தின் ஞானகாண்டமான உபநிஷத்துக்கள் கர்ம காண்டத்தில் இந்த, இந்த தேவதைகளை உபாஸிக்கச் சொல்லி, அதற்கு ஏகப்பட்ட வழிபாட்டு முறைகளைக் கொடுத்துவிட்டு, இதே உபநிஷத்துக்களில் அதே வேதம், "பூஜை செய்பவனை, பசுவுக்கு சமமாக பாவித்து கேலி செய்கின்றது!"

இது படிப்பதற்கும், கேட்பதற்கும் மிகவும் ஆச்சரியமாக உள்ளதல்லவா?


ஒரே வேதத்தின் ஆரம்பத்தில் என்ன இருக்கின்றதோ, அதற்கு முழுவதும் மாறாக அதன் முடிவு இருக்கின்றது.

## 5. ஆதி சங்கரரின் வருகை!

இப்படி கர்மத்தைப் பிடித்துக் கொண்டு, பல கடவுளர்களை உருவத்தில் வடித்துக்கொண்டு, பல விதமான வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த இந்த அஞ்ஞானக் கூட்டத்தைக் கண்டும், அவர்களால் உண்டான தீங்குகளைக் கண்டும், அந்த சர்வேஸ்வரன் ஒரு அவதாரத்திற்கு திட்டமிட்ட திருவிளையாடல்கள் இவைகள் என்பதை அறிய முடிகின்றது.

ஆம்!, இப்படி மனிதன் தனக்கு கொடுக்கப்பட்ட அறிவை அஹங்காரமாக மாற்றிக் கொண்டு, அதன் விளைவாக தன்னையறியாமல், தன் மனம் போன போக்கிலே வாழ்வ தையும், அவனுக்கு கொடுத்த அறிவை அறியாமல், அஞ்ஞானப் போக்கில் மக்களின் அராஜகம் அதிகமாக காணப்பட்ட காலத்தில், அந்த சர்வேஸ்வரனின் சர்வ வல்லமை பொருந்திய சக்தியாக பகவான் ஸ்ரீஆதிசங்கரர் இந்த புவியில் நன்மக்களை காக்கும் பொருட்டு அவதரித்தார்.

அவரது அவதாரத்திற்குப்பிறகு, இந்த பாரத நாடு ஒரு நல்ல மாற்றத்தை அடைந்தது என்றால் அதுவும் மிகையாகாது.



அவர் வந்த பொழுது பல மதங்கள், பல வழிபாடுகள், பல சடங்கு சம்பிரதாயங்கள், பல தேவதைகளின் யாக யக்ஞங்கள், யாகங்களின் பெயரில் உயிர்பலிகள் என்று அனேக அக்கிரமங்கள் இந்தப் பாரத பூமியில் தலைவிரித்தாடின.

அந்த மஹானின் வருகையினால், இந்த பாரத பூமியில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. சாதரண மனித சக்தியினால் இப்படிப்பட்ட பெரும் மாற்றத்தைக் கொண்டு வர முடியவே முடியாது.

அனேக தேவதைகளை, அந்த, அந்த தேவதைக்கு உண்டான மந்திரங்களைக் கூறி, அனேக விதமான யாக யக்ஞங்கள் செய்து, அதில் தன்னுடைய சுய நலத்திற்காக, மற்ற உயிர்களை பலியிட்டு, அதன் பலனாக தனக்குத் தேவையான சுவர்கம் போன்ற லோகத்தை அடையவும், அல்லது சுகபோகத்திற்கும், அழியக்கூடிய பொருட்களுக்கும் ஆசை கொண்டு, யாக, யக்ஞங்கள் போன்ற கர்ம காரியங்களில் ஈடுபடுகின்ற ஒரு மனப்போக்கு இருந்த இருண்ட காலம் அது.

அப்படிப்பட்ட தவறான போக்கினை கொண்ட மக்களின் மனதினை மாற்றி, திடீரென ஒரு நல்ல மார்க்கத்திற்கு உடனடியாக அழைத்து வந்துவிட முடியாது என்பதை அறிந்த அந்த மஹாஞானி, அவரவர்களுக்கு பிடித்த சிறு, சிறு தேவதைகளைக் கொண்ட குழுக்களை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு பெரும் சக்திக்கொண்ட தேவதையை வழிபட்டாலே போதும் என்றும், நீங்கள் வழிபடும் அனைத்து சிறு தேவதைகளின் சக்திகளும் அந்த பெரிய தேவதையின் சக்திக்குள் அடக்கம் என்றும் புரியவைத்து ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்.

அந்த வகையில், பல சிறு தேவதைகளின் சக்திகள் அடங்கிய பிரதானமான பெரும் தேவதையாக ஒன்றை கணபதியாகவும், மற்ற பல சிறு தேவதைகளின் சக்திகள்

அடங்கிய பெரும் சக்தி ஒன்றை சுப்ரமணியராகவும், ஒன்றை சிவனாகவும், ஒன்றை விஷ்ணுவாகவும், ஒன்றை அம்பாள் ஆகவும், மற்றொன்றை சூரியனாகவும் கொண்டு வழிபடுமாறு பலவகையான சிறு தேவதைகளை தனித்தனியாக வழிபட்ட மக்களை ஒருங்கிணைத்து இப்படி ஆறு சமயங்களாக வகுத்து, ஆறு தெய்வ வழிபாட்டிற்குள் கொண்டுவந்துக் கொடுத்தார்.

அந்தவகையிலே தொன்றுதொட்டு நிலவிவந்த சிவனை வழிபடுகின்ற சைவம், திருமாலை வழிபடுகின்ற வைணவம், சக்தியை வழிபடுகின்ற சாக்தம், வினாயகரை வழிபடுகின்ற கணாபத்தியம், முருகனை வழிபடுகின்ற கௌமாரம், சூரியனை வழிபடுகின்ற சௌரம் போன்றவற்றை முறைப்படுத்தி, ஆறு சமயங்களாக (ஷண்மதங்களை) ஏற்படுத்தினார்.

இன்றுவரை இந்த வழிபாட்டு முறைகளே நடை முறையில் உள்ளது. இதற்கான யாக, யக்ஞங்களும் நடை முறையில் உள்ளன.

ஆனால், இன்றுவரை வழிபாட்டு தேவதைகள் மட்டுமே மாறியுள்ளன. வழிபடும் முறைகளில் பெரிய மாற்றம் எதுவும் இதுவரை வரவில்லை. வழிபடும் மக்களிடையே கூட எந்த வித மாற்றமும் பெரிதாக நடந்துவிடவில்லை.



அதேப்போன்று, கருப்பராயன், மதுரைவீரன் போன்ற உயிர்பலிகள் கொடுத்து வழிபடும் தெய்வங்களை வழிபடுகின்ற இந்த ஷண்மதங்களில் சேரவே சேராத ஒரு சாரர் இன்றும் இருக்கின்றனர்.

மற்றொரு சாரர் ஷண்மதங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அந்த வழிப்பாடுகளில் நாளடைவில் சில மாற்றங்களை கொண்டுவந்து, சிவனை மட்டுமே சிறப்பானவர் என்றும் அவரை வணங்குகின்றவர்களை சைவ சித்தாந்திகள் என்றும், பெருமாள் மட்டுமே பயனுள்ளவர், அவரை வணங்குகின்றவர்கள் வைணவர்கள் என்றும், அதிலும், வடகலை, தென்கலை என்று இரு பிரிவுகளை உண்டாக்கிக் கொண்டு, அவரவர்களது வழிபாடுகள் மட்டுமே உயர்ந்தது

என்று வாதிட்டும், சண்டையிட்டுக் கொண்டும், ஏக இறைவனை பேதப்படுத்தி, மதவெறி கொண்ட அஞ்ஞானிகளான ஒரு சாரரையும் இன்றுவரை இந்தப் புவியில் காண முடிகின்றது.

இந்த இறைவழிபாடுகளில் தற்பொழுது தமிழ்வழி அர்ச்சனை, சமஸ்கிருத வழி அர்ச்சனை மற்றும் தமிழ்வழி வேத மந்திரங்கள், அதற்கான யாக யக்ஞங்கள், அடுத்து சமஸ்கிருத வழி வேத மந்திரங்கள், அதற்கான யாக, யக்ஞங்கள் என்று மொழிகளினாலே இறைவனையும், இறை வழிபாட்டையும் பிரித்துக் கொண்டு, இறைவனை அறிவதை விட்டு, விட்டு மொழிகளை காப்பாற்றவும், இவர்களது வைதீக தொழில்களைக் காப்பாற்றவும் மிகவும் போராடுகின்றனர்.

இதனால், இவர்கள் இத்தகைய மக்களின் அறியாமையை பயன்படுத்திக்கொண்டு, அவர்களது வழிபாட்டு முறைகளில் மொழிகளினாலே மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு, தமிழ்வழி வைதீகம், சமஸ்கிருதவழி வைதீகம் என்று அவரவர்களின் வழிபடுகின்ற கடவுள்களுக்கு ஏற்ப, அவரவர்களின் அற்ப கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு, வைதீக கர்மங்களை தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் செய்துக் கொண்டு, எப்படியோ தங்களது தொழில் நன்றாக நடக்கவேண்டும், யார் எப்படிப்

போனால் என்ன? என்று, தன் வாழ்க்கையை மட்டுமே சுயநலமாகப் பார்க்கின்ற சராசரி மக்களை இன்றும் காண முடிகின்றது.

இதற்குக் காரணம், இறைவனின் விளையாட்டு இன்னும் முடிவடையவில்லை. இந்த யுகம் இன்னும் தொடரும், இந்த தொடர் யுகத்தில் மீண்டும் அந்த சர்வேஸ்வரன் ஏதாவது அவதார நோக்கத்தை வைத்திருப்பார், அந்த அவதாரத்தின் வெளிப்பாடாக இந்த வழிபாடுகளிலும் ஏதேனும் மாற்றங்கள் வந்து, இன்னும் பல மாறுதல்களை இந்த உலகம் சந்திக்கும் காலம் அந்த எல்லாம் வல்ல சர்வேஸ்வரனிடம் மட்டுமே உள்ளது.

இனி ஒரு அவதாரத்தினால் மட்டுமே மாற்றம் நிகழும்!

# 6. வேதத்தில் கர்மத்தை கண்டித்தல்!

இப்படி உபநிசத்துக்களில் கர்மடர்களை ஒரு புறம் கேலி செய்கின்றது. மற்றொரு புறம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் (கர்ம காண்டமான) வேதத்தைத் திட்டுகிறார்.

புத்தரும், மகாவீரரும்தான் முதலில் வேதத்தைத் திட்டினார்கள் என்று பொதுவாகக் கூறுகின்றார்கள்.

ஆனால், சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாதான் இவர்களுக்கு முன்னதாகவே வேதத்தை நன்றாக திட்டியிருக்கின்றார்.

"வேதமெல்லாம் சத்வ – ரஜோ – தமோ என்ற முக்குண சம்பந்தமானதுதான் என்றும், இந்த முக்குணங்களையும் கடந்த நிலையை நீ அடையவேண்டும்" (அத்தியாயம் – II. 42 – 45) என்று அர்ஜுனனிடம் கூறுகின்றார்.

“காமாத்மாக்களாக சுவர்க்கத்தில் ஆசை வைத்துக் கொண்டு, போகங்களில் மூழ்கியவர்களும், ஐஸ்வர்யத்தை மட்டுமே நினைத்துக் கொண்டு, இந்த கர்மங்களின் பயன் களைப் புகழ்ந்து பேசுகின்ற வேதவாக்கியங்களை விரும்பி, கர்மங்களின் பயனாக, மீண்டும் பிறவியைக் கொடுக்கின்ற செயல்களை மறுபடி, மறுபடி செய்து ஜன்மா எடுத்துக்

கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு பரமாத்மாவின் சமாதியில் உண்டாகிற நிச்சயமான புத்தி ஏற்படாது" என்றெல்லாம் நிந்திக்கின்றார்.

மற்றோரிடத்தில் "வேத யக்ஞ அத்யயனங்களால் நான் அடையத் தக்கவனில்லை" (அத்தியாயம் XI – 48) என்கின்றார்.

வெறும் கர்மானுஷ்டானங்களை மாத்திரம் செய்து கொண்டு, ஈஸ்வரனை எவனொருவன் உணராமல் இருக்கின்றானோ, அவன் நெருப்பிலே விறகைப் போட்டுப் புகையை மாத்திரம் எழுப்பிக் கொண்டிருக்கிறான்.

"அவன் மூடன், அவன் ஆத்ம ஸ்வரூபத்தை ஒருநாளும் அறிந்துக் கொள்ள மாட்டான்" என்று ஸ்ருதியில் கர்ம காண்டத்திலேயே தைத்திரீய காடகத்தில் (முதல் ப்ரச்னம், கடைசி அநுவாகம், 4–ம் வாக்யம்) வருகின்றது.

வேதம்தான் சகலவிதமான தர்மத்திற்கும் மூலம் என்று இத்தனை காலம் பேசிவிட்டு, அதன் பிறகு, அதே வேதத்தில் கூறப்பட்ட கர்மாக்களை செய்ய வேண்டியதில்லை என்று வேதத்தின் இறுதிப் பகுதிகளில் கூறுவது முரண்பாடக இருக்கின்றதே என்று அனைவரும் ஆச்சரியப்படலாம்.

மேலும், இதுவரை இந்தப்புத்தகத்தின் வாயிலாக படித்து முடித்த பகுதிகளைப் பார்க்கின்ற பொழுது, இனி, வேதத்தின் கர்மகாண்டத்தில் கூறியுள்ளது போன்று எந்த கர்மாவும் இனி செய்ய வேண்டியதில்லை என்ற ஒரு முடிவான மனநிலை உண்டாகிவிட்டது அல்லவா?

பெரும்பாலனவர்களுக்கு இனி, பூசைகள், யாக யக்ஞங்கள், ஜபதபங்கள் எதுவுமே வேண்டாம் என்ற மனம் நிச்சயமாக உண்டாகியிருக்கும், இனி ஞானத்தை மட்டும் அடைந்தால் போதும் என்ற மனநிலை வந்திருக்கும்.

இதற்குக்காரணம், கர்மத்திற்கு எதிராக கொடுக்கப்பட்ட விசயங்கள் அப்படி ஒரு மன நிலையை நம் அனைவருக்கும் கொடுத்திருக்கின்றது.

இதே தவறைத்தான் அன்றிலிருந்து இன்றுவரை வேதத்தின் பூர்வபாகமான கர்மகாண்டத்தை மட்டும் கற்றுக்கொண்டு விட்டு, கர்மா மட்டும் செய்தால் போதும் என்ற மன நிலையில், வேதத்தின் அந்த (இறுதி) பாகமான வேதாந்தம் என்ற ஞானகாண்டத்தினை கற்காமல் விட்டு விடுகின்றார்கள்.



இப்படிப்பட்டவர்களைத்தான் வேதத்தை காத்து இரட்சிக்க வந்த ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா பகவத் கீதையின் வாயிலாக திட்டுகின்றார்.

## 7. பக்தியின் அவசியம்

மற்றொரு சாரர் இதே தவறை செய்கின்றனர். அதாவது, ஆரம்பத்திலேயே ஞானத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, பக்தி, பூசைகள் போன்றவற்றை விட்டு விடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களை காணுகின்ற போது, அவர்களை நினைத்து பரிதாபம்தான் வருகின்றது.

கர்மங்களான, பூசை, புனஸ்காரங்கள், இறை நாம ஜபங்கள், தியானம் போன்ற எந்த கர்மாக்களையும் செய்யாமல், மனம் சுத்தி அடையாமல், உலக விஷய சுகங்களில் மனம் அலைப்பாய்கின்றது நிற்காமல், நேரடியாக ஞான காண்டத்தினை மட்டுமே கற்றுக்கொண்டு, பரமாத்மாவைப் பற்றிய புறஅறிவை மட்டும் பிடித்துக்கொண்டு, அந்த அதி உன்னத, அகண்ட வஸ்துவான பரம்பொருளான அந்தர்யாமியை எந்த மனதின் வாயிலாக அறியமுடியும்?

சூரியனுடைய பிரகாசம் இரசம் பூசப்பட்ட தெளிந்த கண்ணாடியில் பிரகாசிக்குமா? அல்லது புகைபிடித்த இரசம் பூசப்படாத கண்ணாடியில் பிரகாசிக்குமா?

இங்கு இரசம் என்று குறிப்பிடுவது இறைவனின் மீது காட்டுகின்ற "அன்பு" என்ற பக்தி இரசம் ஆகும். அந்த அன்பு என்ற பக்தி இரசம் பூசப்படாத மனதில் அந்த இறைவனின் ஆத்ம ஒளியை பிரகாசிக்கச் செய்ய முடியுமா?

யோசித்துப் பாருங்கள்!

ஆத்மஞானம் உண்டாக வேண்டுமென்றால், பூசைகள், ஜபதபங்கள், தியானம் போன்ற பொருட் செலவில்லாத கர்ம காரியங்களையாவது நாம் செய்தே ஆகவேண்டும். யாக, யக்ஞங்கள் செய்ய பொருட்செலவுகள் அதிகம் ஆகலாம் என்பதினால், இதை அனைவராலும் செய்ய இயலாது. ஆகவே, இதுப்போன்ற நம்மால் இயன்ற சித்த சுத்தி கொடுக்கின்ற காரியங்களை நித்ய கர்மாவில் கொண்டுவர வேண்டும்.

பகவத் கீதையிலே பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கர்மாவைப் பிடித்துக் கொண்டு விடமுடியாதவர்களை திட்டுவதைவிட, இப்படி எந்தவித கர்மாவும் செய்ய மாட்டேன், நான் ஞானத்தை அடைந்தவன் என்று கூறுகின்றவர்களைப் பார்த்து, கர்மயோகம் என்பது எப்படிப்பட்டது என்றும் எடுத்துரைக்கிறார்.

ஆகவே, அந்த சர்வேஸ்வரனாலே கொடுக்கப்பட்ட வேதம் முரண்படவில்லை. முரண்பாடுகள் எல்லாம் அதைக் கற்கின்ற மனிதனின் மனம் செய்கின்ற வேலை.

ஆகவே, தீர விசாரித்துப் பார்த்தால், இதிலே முரண்பாடாக ஒன்றும் இல்லை என்பது மிக நன்றாகத் தெரியும்.

சாதாரணமாக நாம் இருக்கின்ற இந்த உலகச் சூழ்நிலையில், முக்குணங்களையும் கடந்து, மனதை ஆடாமல், அசையாமல் ஓரிடத்தில் நிறுத்தித் தியானம் செய்து, உபநிஷத்துக்களில் கூறுவது போன்று, ஆத்மாவின் சத்ய நிலையைத் தெரிந்துக் கொள்வது என்பது, தற்பொழுது துளிக்கூ முடியாமல்தானே இருக்கின்றது? ஆனால், மனிதனை அந்த நிலைக்கு சிறிது, சிறிதாக கொண்டு சேர்ப்பதற்கான வழி முறைகளாக இந்த பூசை, புனஸ்காரங்கள், கர்மாநுஷ்டானங்கள், மற்றும் மந்திர ஜபங்களும் அவனது மனத்தூயமைக்காகத் தேவைப் படுகின்றன.

## 8. அறியாமையின் வெளிப்பாடு!

இந்த உலகம் என்பது நிஜம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற வரையில், இதிலே நாம் சந்தோசமாக இருப்பதற்காகத்தான் தேவதைகளை உபாஸிக்கின்றோம்.

இந்த உலகம் நிஜம் என்று நினைப்பதால்தான், மற்ற சொர்கம் போன்ற லோகத்துக்கு செல்வதற்கும் ஆசைப்படுகின்றோம். அதனால், சொர்கம் போன்ற லோகங்களில் உள்ள தேவதைகளை திருப்தி செய்து வழிபடுகின்றோம்.

இந்த பூலோகம் போன்றே தேவலோகம் நிஜம், தேவதைகளும் நிஜம் என்று வைத்துக் கொண்டு அந்த தேவதைகளுக்கு ஆஹூதி கொடுத்து, அவர்களை திருப்தி செய்து, அவர்களிடமிருந்து பிரதி உபகாரமாக பல நன்மைகளைப் பெறுகின்றோம்.

(குறிப்பு:– இந்த பூலோகமே உண்மையில்லை, இது இறைவனின் மாயை எனும்போது, மற்ற லோகங்களான சொர்கம், நரகம் எல்லாம் உண்மையிலேயே எங்கு இருக்கும்?)

இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவது போலவே, தேவலோகத்துக்குப் போய் சுவர்க்க சுக போகங்களை அடைந்து அநுபவிக்க ஆசைப்படுகின்றோம்.

ஆனால், பெரும்பாலனவர்கள் இந்த கர்ம, உபாஸனை போன்ற வழிபாட்டிலேயே நின்றுவிட்டால், முக்கியமான மோக்ஷம் என்ற இலக்ஷ்யத்தைக் கோட்டை விட்டதாக அல்லவா ஆகிவிடுகின்றது?

ஆனால், உண்மையில் நாம் பரமாத்மாவை சாஸ்வதமாகச் சேர்ந்திருப்பதுதானே நம்முடைய லக்ஷ்யம்? அதை விட்டுவிட்டு, மற்றவைகளை மட்டும் பிடித்துக் கொண்டு இருந்தால் அது அறியாமைதானே?

நாம் இருக்கின்ற நிலையில் இந்த பூலோகத்தைப் பொய்யென்று நினைத்துக் கொள்ள முடியவில்லை என்பதால், “சரி, மெய்யென்றுதான் வைத்துக் கொள்” என்று கூறி, உலக சுபிக்ஷத்திற்கான கர்மாக்களை வேதம் கொடுத்திருக்கிறது.

நாம் உள்ள நிலையில் அரூபமான ஒரே பரமாத்மாவை அபேதமாக (ஒரே சத்தியமாக) உபாஸிக்க முடியவில்லை என்பதால், பலவிதமான தேவதைகளின் உபாஸனைகளை வேதம் கூறியிருக்கின்றது.

இதில், தொடர்ந்து கர்மாவும், உபாஸனையும் செய்யும் போதே, அதன் பலனாக, மற்றவைகளெல்லாம் அநித்யம்,

இருப்பது சத்தியமான பரமாத்மா ஒன்று மட்டுமே என்ற அறிவும், அதனால், மற்ற உலகமெல்லாம் அடிபட்டுப்போய், கர்மாவும் நின்று விடுகின்ற ஞானநிலை நமக்கு உண்டாக வேண்டும். அதுவல்லவா ஞானம்!.

பல தேவதைகளை உபாஸிப்பதாக இல்லாமல், பரமாத்மாவுக்கு அன்னியமாக "நான்" என்றே ஒன்று இல்லை என்று, அறிந்து அதிலேயே கரைகின்ற நிலை வரவேண்டும். இதுவல்லவா முக்தி. அதற்கான, ஆரம்பப் படிகளாக சித்த சுத்தியும், மனதின் ஒருமுனைப்பாடும் ஏற்படுவதற்காகவே இந்த கர்மாக்களையும், உபாஸனைகளையும் வேதம் கொடுத்திருக்கிறது.

அப்படியில்லாமல், வெறுமனே லௌகிகமான சந்தோசத்தை உண்டாக்கிக் கொள்வது, தேவதைகளிடம் கொடுக்கல் – வாங்கல் வியாபாரம் போன்று யாக, யக்ஞங்கள் செய்வது, மேலும், ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுவது என்பது இறைவனை சராசரி மனிதைப் போன்ற வியாபாரியாக மாற்றி, அவனிடமே அதைக் கொடுக்கின்றேன், இதைக் கொடுக்கின்றேன் என்று வேண்டுவதும், அதற்கு பிரதி பலனாக நீ இதை, இதை எனக்குக் கொடு! என்று கேட்பதும் நடைமுறையில் உள்ளது.

அதனால், அறியாமையின் காரணமாக, இந்த மந்திரத்தை உபாசிக்கின்றேன். நீ இந்தப் பலனைக் கொடு,

அந்த மந்திரத்தைக் கூறுகின்றேன், அந்தப் பலனைக் கொடு என்று கர்மகாரியமாக வழிபாடு செய்வதை மட்டுமே, சாஸ்திரங்கள் பரிகாசம் செய்கின்றது.

இப்படிப்பட்டவர்களுக்கு அந்த சத்திய வஸ்துவை அறிந்து ஆத்ம சுகம் அடையவேண்டிய அவகாசம் இந்தப் பிறவியில் இல்லாமல் போய்விடும் என்று அறிவுரை வழங்குகின்றது.

தேவலோகத்துக்குப் போனாலும், ஆத்மசுகம் என்ற சத்ய சாக்ஷாத்கார ஆனந்தம் அங்கு கிடைக்காது. மேலும், தேவலோக வாஸமும் நம் புண்ணியம் தீர்ந்தவுடன் முடிந்து, நாம் மறுபடி பூலோகத்தில் கர்ப்ப வாஸம் செய்வதற்காகத் திரும்பித்தானாக வேண்டும்.

ஒரு அளவுக்கு நம் இப்போதைய மனப்பான்மைக்கு விட்டுக்கொடுத்தும், நம்மை இன்றுள்ள நிலையிலிருந்தே சிறுகச் சிறுக பக்குவப்படுத்தவுமே கர்மாவும், உபாஸனையும் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதை அறியாமல், நான் இதோடேயே நின்றுவிடுவேன், மேலே போக மாட்டேன் என்றால், அதுவும் தவறு.

ஆகவே, வேத கர்ம அநுஷ்டானங்களைச் செய்ய மாட்டேன் என்பதுவும் தவறு. அதற்குப்பிறகு, அதை ஒருநாளும் விடமாட்டேன் என்பதுவும் மிகப்பெரிய தவறு.

# 9. எப்படி அணுகவேண்டும்?

இன்றைய காலத்தில் பெரும்பாலானவர்கள் ஆரம்பத்திலேயே 'யக்ஞமாவது? அத்யயனமாவது? இதெல்லாம் நமக்குத் தேவையே இல்லை, நேராக நான் உபநிஷத்துக்கள் படிக்கப் போகின்றேன்' என்கின்றார்கள்.

இதனால் புத்தி பூர்வமாக உபநிஷத்தைப்பற்றி நிறையப் பேசுகின்ற ஒரு சூழ்நிலை வந்திருக்கின்றதே தவிர, அவர்களுடைய அநுபவத்தில் அமைதியை அடைந்தவர்களாக, வைராக்யம் உள்ளவர்களாக, ஆத்ம ஞானிகளாக யாரும் இல்லை.

ஆரம்பகாலத்திலேயே அதற்கான சாதனைகளான கர்மாநுஷ்டானங்களை, இறை நாம ஜபங்களை விட்டு விட்டதின் விளைவுதான் இதற்குக் காரணம்.

இது ஒரு விதத்தில் தவறு என்றால், ஞானத்துக்கே வரமாட்டேன் என்று, கர்ம காரியங்களிலேயே பூசை, வழிபாடு என்று பெரும்பாலானவர்கள் நின்று விடுவது, இன்னொரு விதத்தில் மிகப்பெரிய தவறாக இருக்கின்றது.

உலகியல் கவியில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று ஒவ்வொன்றாகப் படித்து விட்டுத்தான், மேல் நிலை பட்டப்படிப்பிற்குப் போக முடியும்.

எடுத்தவுடனேயே பி.ஏ. பட்டப்படிப்பில் சேருவேன் என்றாலும் அது தவறு. அதுப்போல, ஆரம்ப வகுப்புகளிலேயே ஃபெயிலாகிக் கொண்டு, அதிலேயே அப்படியே இருப்பேன், மேல்வகுப்பிற்குப் போக மாட்டேன் என்றால் அதுவும் தவறு.

ஆதிகாலத்தில் ஆரம்ப வகுப்புகளை மட்டுமே பிடித்துக் கொண்டு, மேல் வகுப்புகளுக்கு வர விரும்பாத கும்பல் நிறைய இருந்தது.

இன்றைய காலத்தில், அவர்களுக்கு பதிலாக எடுத்தவுடனேயே நான் பட்டப்படிப்புதான் படிப்பேன் என்று அடம்பிடிக்கின்ற கும்பல் இன்னும் அதிகம் இருக்கின்றது.



ஸ்ரீ கிருஷ்ணபகவான் வாழ்ந்த காலத்தில், கர்ம அநுஷ்டானத்தை விட்டு விட்டு, ஞானத்துக்கு வராதவர்கள் மிக அதிகம் இருந்தார்கள். அவர்களைத்தான் அவர் திட்டினார்.

வேதத்தை அவர் திட்டியதாகத் தோன்றுவதெல்லாம், உண்மையாகவே, வேத தாத்பர்யத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல், வேத கர்மாவோடு நின்றுவிட்டவர்களைக் குறித்து அவர் திட்டியதுதான் ஆகும். உயர்ந்த வேதத்தை அவர் ஒரு நாளும் திட்டமாட்டார். வேதங்களை ரக்ஷித்துக் கொடுப்பதற்காகவேதான், ஸ்ரீ கிருஷ்ணர் திரும்பத் திரும்ப அவதாரம் எடுத்ததாகும்.

உலக பொருளாதாரக் கல்வியைக் கற்க எப்படி முதல்வகுப்பு, இரண்டாம்வகுப்பு என்று மேல்நிலைப் படிப்பு வரை படிப்படியாகப் படித்துத்தான் வர வேண்டும்.

இவைகளை எதுவும் படிக்காமல் முதலிலேயே பி.ஏ. என்ற பட்டப்படிப்பிற்கு போகின்றேன் என்பவன் ஒரு படிப்பும் படிக்கப் போவதில்லை. அவனை ஒரு வழிக்கும் கொண்டு வரவும் முடியாது. ஆரம்ப வகுப்பில் படிக்கிறவன் கொஞ்சமாவது விஷயம் தெரிந்து கொள்கிறான். இவனோ ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாது.

இப்படிப்பட்டவர்கள் நேரடியாக வேதாந்தப் படிப்பிற்குள் நுழைய முயற்சிக்கின்றார்கள்.

# 10. ஞானமும், ஞானியும்!


வேதத்துக்கும், வேதாந்தத்துக்கும் முரண்பாடே இல்லை. வேதாந்தத்துக்குப் பக்குவப்படுத்துவதற்காகவே வேதத்தின் முற்பகுதிகளான ‘கர்ம காண்டம்’ இருக்கிறது.

இப்படிப்பட்ட கர்மகாண்டம் உலக விசயங்களைப் பற்றிக் கொண்டு, வாழ்வியல் தேவைக்கு அவசியமான வைகளை அடைய விரும்பி முக்குண சம்பந்தங்களால் செய்யப்படுகின்ற கர்ம காரியங்கள் போன்று தோன்றினாலும், அந்த இறைவன் இந்த உலகத்திலிருந்து வேறானவன் இல்லை என்று புரிந்து கொண்டு, இந்த உலக உயிர்கள் நலமுடன் வாழ செய்யப்படுகின்ற யாக, யக்ஞங்கள் அனைத்தும், அந்த எல்லாமாக இருக்கின்ற இறைவனைக் காட்டிக் கொடுக்கின்ற ஞானத்திற்கு தானாகவே கொண்டு சேர்க்கும்.

"ஞானிக்கு இந்த உலகம் பொய்யாகத் தோன்றினாலும், நமக்கு அது உண்மைப்போன்றே இருந்துக் கொண்டு நம்மை தொந்தரவு படுத்துகிறது?

இந்த தொந்திரவு தீருவதற்கு யக்ஞம் போன்ற அநுஷ்டானம் எதுவும் ஞானி பண்ணவில்லையே!" என்றும் தோன்றுகின்றது.

ஆனால், ஞானி இருக்கின்ற உத்தமமான ஸ்திதியைப் பார்க்கின்ற பொழுது, அவன் யக்ஞம் என்ற ஒன்றைச் செய்துதான் இந்த உலக க்ஷேமத்தை உண்டு செய்ய வேண்டும் என்ற அவசியமே இல்லை. அவன் வாழ்க்கை முழுக்கவே யக்ஞமாகத்தான் இருக்கின்றது.



அவன் இந்த உலகத்தையும், அவனது உடலையும் அடியோடு பொய்யென்று நினைத்தாலும் சரி, அல்லது இந்த உலகமும், உடலும் பகவானின் லீலை என்று நினைத்தாலும் சரி, அவன் மூலமாக இந்த உலகத்திற்கு பகவானின் அநுக்கிரஹம் ஓயாமல் வெளிப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றது.

ஞானிகளிடம் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகப் போவதற்குக் காரணம் என்ன?

அவர்கள் ஜனங்களை விட்டுப் போனாலும் கூட, இவர்கள் போய் அவர்களுடைய காலில் விழுவதற்கு காரணம் என்ன?

அவர்கள் செய்கின்ற அனுக்கிரஹம்தான் காரணம்.

அவர்கள் விருப்பப்பட்டு செய்கின்றார்களோ இல்லையோ, ஆனால் அவர்கள் மூலமாக ஈஸ்வராநுக்ரஹம் இந்த உலகத்திற்குப் பாய்கின்றது.

அவர்களது சந்நிதானத்திலேயே மக்களுக்கு மன சாந்தி உண்டாகின்றது.

மக்களின் உலக ரீதியான வேண்டுதல்கள் கூட நிறைவேறுகின்றன.

தனக்கு அன்னியமாக தேவதை இல்லை என்ற ஞானத்தை அடைந்து விட்ட ஞானியே தேவதைகளுக் கெல்லாம் ஒருபடி மேலே பெரிய அநுக்ரஹத்தைப் பண்ணி விடுகிறான்.

அதனால், அவன் யக்ஞம் செய்யவில்லையே, உலக க்ஷேமத்துக்கு எதுவும் செய்யவில்லையே! என்று நினைப்பது தவறு.

## 11. தர்மத்தை அறியாதது!

பிற்காலத்திய வேதாந்த (ஹிந்து) தர்மத்தை, வேத கர்மாநுஷ்டான காலத்திலிருந்து பிரித்து, இந்த தர்மம் ஹிந்துக்களுக்கு (தனி மனிதனின் மோக்ஷம்) மட்டுமே முக்கியம் என்று நினைக்கின்றனர், உலக சுபிக்ஷத்தைப் பற்றி, இவர்கள் கவனிப்பதே இல்லை.

இவர்கள் கூறுகின்ற தியானம், யோகம், ஸமாதி எல்லாம் சுய நலத்தை மையமாகக் கொண்டவைகள் என்று பிற மதத்தினர்கள் கூறுகின்றார்கள்.

"இயேசுகிறிஸ்து, முகமது நபி, புத்தர் போன்றவர்கள் அன்பு, சகோதரத்துவம் இவற்றைக் கூறியதுப் போன்று, சமூக உணர்வை இவர்களது ஹிந்து மதம் வளர்க்கவில்லை" என்று நமது தர்மத்தைப்பற்றி மற்றவர்கள் குற்றச்சாட்டுகள் வைக்கின்றனர்.

ஆனால், நம் தர்மத்தை சரியாகப் புரிந்து கொண்டால், வேதத்தை வைத்து, வேத மதம், வேதாந்த மதம் என்று பிரிப்பதே தவறு எனலாம்.

சனாதன தர்மத்தில் ஆசிரம தர்மத்தின்படி, கடைசியில் சந்நியாச ஆசிரமத்தில் எவன் வேதாந்தியாக ஞானவிசாரம் செய்து ஞானத்தை அடைகின்றானோ, அவனேதான் அதற்கு முந்தைய ஆசிரமங்களில் அத்யயனமும், கர்மாநுஷ்டானமும் செய்த வைதிகனாக இருந்துக்கொண்டு, இவற்றால் உலக க்ஷேமத்தை உண்டாக்குகின்றான்.

அப்படிச் செய்ததுதான் இவனுக்கு சித்த சுத்தியைக் கொடுத்து, தன்னுடைய சொந்த மோக்ஷத்துக்கு நேர்வழியான வேதாந்தத்திற்கு கொண்டுவருகின்றது.

அதிலே, சித்தி அடைந்து ஞானியான பிறகும், இவன் காரியம் எதுவும் செய்யாமலேயே, தன் சந்நிதான விசேஷத்தாலேயே உலகத்திற்கு அனுக்கிரஹம் செய்துக் கொண்டிருக்கிறான்.

தனி மனிதனின் விமோசனம், சமூகத்தின் நன்மை என்ற இரண்டில், எது மதங்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டும் என்று இங்கே ஆராயவில்லை. அது, தனிப்பட்ட விஷயம் கூட.

சனாதன தர்மம் என்ற இந்த வேதத்தில் கூறப்பட்ட வழிமுறைப்படி வாழ்ந்து, ஒரு தனி மனிதன் தன்னை உணர்ந்து, ஞானி ஆகிவிட்டால், அவனுடைய சமூகம் நன்மை அடைவதை யாரால் தடுக்க முடியும்?

இது எப்படியென்றால், ஒரு தீபத்திலிருந்து கோடிக் கணக்கான தீபங்களை ஏற்ற முடியும்போது, ஒரு ஞானி யிடமிருந்து கோடிக்கணக்கான ஞானிகள் அந்த மதத்தில் உருவாகுவார்கள்.

கோடிக்கணக்கான தீபங்களை, அந்த ஒரு தீபத்தை வைத்து ஏற்றினாலும், அதன் பிரகாசச் சுடர் கொஞ்சம் கூட குறையாது. அதுப்போல, ஒரு ஞானி தன்னிடம் உள்ள அறிவை வைத்து, எத்தனைக் கோடிக்கணக்கான மக்களுக்கு கொடுத்தாலும், அவரிடம் உள்ள அறிவுச்சுடர் கொஞ்சம் கூட குறையாது. அதைவிடுத்து, ஒரு மதத்தைச் சேர்ந்தவன் பரமாத்ம தத்வத்தை அநுபவத்தில் தெரிந்து கொள்கின்ற ஞானியாகா விட்டால், அந்த மதம் இருந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன?

இந்த ஞானநிலைக்கு கொண்டு வருவதற்காகத்தான் நம்முடைய வேதத்தில் அத்தனை கர்மாவும், உபாஸனையும் வைத்திருக்கின்றது.

வித்யாசமே இல்லாமல் எல்லாம் ஒன்றாகிப் போய் விடுகின்ற ஞான நிலையை அடைவதற்கு வழியாகவேதான் நூறாயிரம் வித்யாசமுள்ள வர்ணாச்ரம தர்மங்கள், இன்னார் தான் இதைச் செய்யலாம் என்ற அதிகார பேதங்கள் எல்லாம் வைத்திருக்கின்றது. வெறும் கர்மாவோடு, வித்யாசத்தோடு நின்று விட்டால் தவறு.

## 12. வேதத்தை பார்க்கும் பார்வை

'கர்மாவைப்பற்றி கூறுகின்ற வேத பாகம்தான் அர்த்த முள்ளது. ஞானத்தைக் கூறுகின்ற பாகம் அர்த்தமற்றது' என்று கூறிய பூர்வ மீமாஸகர்களைத் திட்டுகின்ற நோக்கத்தில்தான், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா வேதத்தையே திட்டுகிறது போன்று கீதையில் கூறியுள்ளார்.

அவர் உண்மையாகவே திட்டியது வேத வாத ரதா: என்று அவரே கூறுகின்றபடி, வேதத்தைப் பற்றி வெறும் வாய்ச் சவடாலில் அர்த்தம் செய்துகொண்டு, அதிலேயே சந்தோஷப் பட்டுவிட்டு, அதன் லக்ஷ்யமான அநுபவ ஞானத்துக்கு முயற்சி செய்யாதவர்களை திட்டியதுதான் ஆகும்.

அதாவது, முதலில் கர்மா வேண்டும். வேதம் கூறியபடி காரிய ரூபத்தில் கடமைகளைச் செய்ய வேண்டும். ஆனாலும், கர்மாவை விடுகின்ற மிகப்பெரிய ஆத்மாநுபூதி நிலைக்குப் போவதற்கே இது ஆரம்பப் படி என்று தெரிந்து கொண்டுச் செய்ய வேண்டும்.

இதுப்போன்றே, முதலில் தேவதா உபாஸனை கண்டிப்பாக செய்யத்தான் வேண்டும். ஆனாலும், உபாஸிக் கப்படும் தேவதையும், உபாஸகனான தானும் வேறில்லை என்று அறிவதற்கு, ஆரம்ப சாதனமாகவே இதை உபாஸிக் கின்றோம் என்று புரிந்து கொள்ளவும் வேண்டும். இதில் முதலில் வித்யாசங்கள் பார்க்கத்தான் வேண்டும். இருமைகள் இருக்கத்தான் செய்யும். அதுவே, அவனை ஒருமைக்கு அழைத்துச் செல்லும்.

உலக வியாபாரம் ஒழுங்காக நடக்க வேண்டுமானால், நமக்குள் காரியங்களைப் பல விதமாகப் பிரித்துக்கொண்டு, அந்தந்த காரியத்தை சுத்தமாகச் செய்வதற்கு, என்ன என்ன தனிப்பட்ட ஆசார அநுஷ்டானாதிகள் உதவி செய்யுமோ, அதை, அப்படிப் பிரித்துத்தான் அவரவர்களுக்குண்டான தர்மங்களாகக் கடைபிடிக்கவேண்டும்.

ஆனாலும் இதுவும், கடைசியில் சகல வித்யாசமும் போய், எல்லாமும், எல்லாரும் “ஒன்றே” என்ற ஒருமைத் தன்மையை தெரிந்து கொள்வதற்குத்தான் என்ற அடிப்படை உண்மையை அறிந்திருக்க வேண்டும்.

வேத அத்யயனம், வேத கர்மாநுஷ்டானம் எல்லாம் அந்த வேதமே அவசியமில்லாமல் போய்விடுகிற அகண்டமான

மஹா அநுபவத்துக்கு வழிதான் என்று வைத்துக் கொண்டு, அவற்றை அப்பியாஸம் செய்ய வேண்டும்.

பூ இருந்தால்தான் பிறகு பழம் உண்டாகும். பூவைப் பார்க்க மிகவும் அழகாக இருந்தாலும், அது காய்ந்து போய் விழுந்தால்தான் பழம் உண்டாகும்.

பூவே இல்லாமல் காய்க்க வேண்டும் என்று, இந்த நாளில் வைதிகாநுஷ்டானமே இல்லாமல் வேதாந்தத்துக்கு போகின்றவர்களை நினைத்தால், அது யதார்த்தத்துக்குச் சரியாக வராது.

இதனால், பூவுடனும் நின்றுவிட வேண்டும் என்று நினைத்து, வேதாந்த ஞானத்துக்கு முயற்சி செய்யாமல் கர்மடர்களாக நின்றுவிட்டால், அதுவும் தவறு தான். எதிலும், ஒரு சரியான புரிதல் இருக்க வேண்டும்.

கீதையில் கூறியதுப் போலவே, பிருஹதாரண்யக உபநிஷத்திலும் (IV.3.22) "எவன் ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்து கொண்டு விட்டானோ அவனுக்கு அந்த நிலையில் வேதம் அத்தனையும் வேதமில்லாமல் போய்விடும்.

தேவர்கள் யாவரும், தேவர்கள் அல்லாமல் போய் விடுவார்கள். பிராமணர்கள் பிராமணரில்லாமல் ஆகி விடுவார்கள். சண்டாளன் யாவரும் சண்டாளன் இல்லாத வனாகி விடுவான் என்று கூறியிருக்கின்றது.

## 13. ஸ்ருதி மற்றும் ஸ்மிருதி!

"ஸ்ருதி" என்று வேதத்தைச் சொல்கிறபோது, அதில் ஸம்ஹிதை மட்டுமின்றி, பிராம்மணமும், ஆரண்யகமும் (உபநிஷத்துக்களும்) அடங்கித்தான் உள்ளன.

கீதை 'ஸ்ருதி' இல்லை. அது 'ஸ்மிருதி'யைச் சேர்ந்ததாகவே கூறுவது வழக்கம். ஸ்மிருதிகளைப் பற்றி, பதினான்கு வித்யையகளில் ஒன்றான தர்ம சாஸ்திரத்தைப் பற்றி கூறுகின்றபோது, "வேத கர்மாவும், உபாஸனையும் ஒருவனை ஞானத்தில் கொண்டுபோய் சேர்க்கா விட்டால், அதனால் ஒரு உபயோகமும் இல்லை" என்று கீதையான ஸ்மிருதி கூறுகின்றது.

'ஸ்ருதி - ஸ்மிருதி - புராணம்' என்கிற மூன்று பிரமாணங்களில், புராணத்திலும் அநேக இடங்களில் வெறும் கர்மாநுஷ்டானத்தோடு நின்று விடுவதைக் கண்டிக்கிறது.

தாருகா வனத்தில் ரிஷிகள் கர்ம மார்க்கமே ஸகலமும் என்று தங்களுடைய யக்ஞோபாஸனையிலேய கர்வப்பட்டுக் கொண்டிருந்தபோது, பரமேஸ்வரன் அவர்களது அஹங்கார

எண்ணங்களை அழித்த கதையை, சைவ புராணங்கள் பேசுகின்றன.

ஆனாலும், பிரமாணங்களில் ஸ்ருதிப் பிரமாணத்துக்குப் பிறகுதான் ஸ்மிருதி – புராணப் பிரமாணங்களைக் கொள்ள வேண்டும்.

கர்மா மட்டும் போதாது என்பதற்கு ஸ்ருதிப் பிரமாணமும் இருக்கிறது என்பதற்கு இங்கே பிருஹதாரண்யக உபநிஷத்தை மேற்கோள் காட்டவேண்டியுள்ளது.

ஆனாலும், "ஸ்ருதியை கர்மகாண்டம், ஞான காண்டம் என்று பிரிக்கிறபோது, இது ஞான காண்டமான உபநிஷத்தில் வருவதுதானே? ஞானகாண்டத்தில் ஞானத்தைச் சிறப்பித்துக் கூறி, கர்மாலக்ஷ்யம் இல்லை என்று கூறியிருப்பதில், விசேஷம் ஒன்றுமில்லையே!" என்று கேட்கலாம்.

ஆகையால், கர்ம காண்டத்திலேயே, 'கர்மாவே எல்லாம், அதுவே லக்ஷ்யம்' என்று நினைப்பதைக் கண்டனம் செய்திருக்கிறது என்பதையும் அறியவேண்டும்.

வேதத்தில் கூறியிருக்கின்ற பல விதமான யாக, யக்ஞங்களையுமே அதன் நோக்கமறிந்து செய்வது அவசியம் என்று பகவான் கீதையிலே கூறும்போது,

"ஏவம் பஹூ³விதா யக்ஞா விததா ப்ரஹ்மணோமுகே"

என்று பாராட்டிக் கூறிவிட்டு, ஆனால், இந்த சகல விதமான கர்மாநுஷ்டானங்களும் ஞானத்தில்தான் முழுமை அடைகின்றன, என்று,

ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே

கூறியிருப்பதைப் பார்த்தாவது புரிந்துக் கொள்ள வேண்டும்.

விறகை மூட்டினால் அதன்மேல் பானையை வைத்துச் சாதம் வடிக்க வேண்டும். அப்படித் தன்னையே ஞானத்தில் பக்குவம் செய்துக் கொள்ளப் பிரயத்தனப்படாமல் ('பக்குவம்' என்றால் சமைக்கப்படுவது என்றே பொருள்.) நமக்குள்ளே இவ்வாறு முழுமை அடைந்து, அரிசி சாதமாவதுப்போல நன்றாகக் குழைந்து விடுவதையும் 'பக்குவம்' என்று சமஸ்கிருதத்தில் கூறப்படுகிறது.

ஆகவே, வெறுமனே யாக, யக்ஞாதிகள் செய்கிறவன், பானையை ஏற்றாமலேயே அடுப்பை எரிய விடுகின்றவனுக்கு ஒப்பானவன் என்றுதான் வேண்டும்.

யக்ஞத்திலே நெருப்பில் ஹவிஸைப் போடாமலே பெரிதாக அக்னியை வளர்த்து என்ன பிரயோஜனம்? இதுப்போன்றுதான், கர்ம பலனையே ஹவிஸாகப் போட்டு எரிக்கிற புத்தியோடு யக்ஞத்தைச் செய்யாவிடில், அது வெறும் புகையாகப் போய் விடுகிறது.

“பிரம்மாக்னியில் ஆத்மாவை ஹவிஸாகத் தர வேண்டும். ஸம்யமம் என்ற புலனடக்க அக்னியில் இந்திரிய நுகர்ச்சிகளை ஹோமம் செய்ய வேண்டும். பஞ்சப்பிராணன்களை ஒன்றிலொன்று ஹோமம் பண்ணவேண்டும்”

என்றெல்லாம் பகவான் கீதையில் சொன்னதற்குப் போவதற்காகத்தான் திரவ்ய ரூபமான, காரிய ரூபமான வைதிக யக்ஞங்கள் எல்லாம் இருக்கின்றன.

இதைத் தெரிந்து கொள்ளாமல் எத்தனை யாக, யக்ஞங்கள் செய்தாலும், ஒருவன் சிறிது கூட புத்திசாலி ஆக முடியாது. அவனுக்குப் புத்தியே இல்லை என்று வேதமும் கூறுகிறது.

அவனுடைய புத்தி எங்கே போகும்?

ஹோமப்புகை போலத்தான், அதுவும் போகிற இடமெல்லாம் கருப்பாகச் செய்துக் கொண்டு, கடைசியில் பிசுபிசுவென்று அசுத்தமாகப் போய்விடும்.

வேத கர்மாவை ஈஸ்வரார்ப்பணமாகச் செய்தோமே யானால், அது பந்தத்தில் கட்டுவதற்குப்பதில், கட்டிலிருந்து சிறிது, சிறிதாக அவிழ்த்து விட ஆரம்பிக்கும்.

நிஷ்காம்யமாக, பகவத் பிரீதிக்காகவே கர்மாவைச் செய்ய செய்ய, அது சித்தசுத்தியைத் தந்து, முக்குணங்களுக்கு அப்பாற்பட்ட "குணாதீதன்" என்ற நிலைக்கு அவனை அழைத்துச் செல்லும்.

உண்மையில், யக்ஞம் என்ற பெயர் இதைத்தான் குறிப்பிடுகிறது.

## 14. கர்மத்தில் ஞானம் அவசியம்

யாகம் என்றால் தியாகம் என்றுதான் அர்த்தம்.

“ந மம” (“எனதில்லை”) என்று, ஒன்றை நெருப்பிலே போடுகின்ற தியாக சித்தம்தான் யக்ஞத்தின் உயர்நிலை ஆகும்.

நெருப்பிலே போட்டதை எடுக்க முடியுமா?

எடுத்தாலும், அவைகள் ஒரு விநாடி நேரத்துக்குள் உருக்குழைந்துத்தானே போகிறது? அதுபோன்று, அஹங்கார, மமகாரங்களை பஸ்மமாக்க வேண்டும்.

இப்படி உயர்ந்த அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதான “யக்ஞம்” என்பதை, அதன் பெயருக்கு நேர் விரோதமாக சுவர்க்கப்பிராப்தி முதலான சுய நல நோக்கிலே, சொந்த லாபங்களுக்காக, அற்ப பலன்களுக்காக, ஒருத்தன் செய்தான் என்றால் அவன் முட்டாள்தானே?

கர்ம காண்டம், ஞான காண்டம் என்பனவற்றுக்குள் முரண்பாடு இல்லவே இல்லை. காரணம், இருமைகள் என்றுமே இல்லை.

கர்மகாண்டத்திலேயே அநேக இடங்களில் கர்மாவின் அவசியத்தையும், அதனைச் செய்ய வேண்டியதின் உண்மை நோக்கத்தையும், கூறிப்பிடும்போது, அது ஞானத்தை நோக்கியே அழைத்துச் செல்கின்றது என்றும் உள்ளது.

மிகவும் உயர்ந்த ஞானப் பிரதானமான தத்துவங்களைக் கூறுகின்ற நாஸாதீய ஸூக்தம், புருஷ ஸூக்தம், திரயம்பக மந்திரம் முதலியவைகள் வேதத்தின் சம்ஹிதா பாகத்திலேயே வருகின்றன.

அவைகள், உபநிஷத்துக்களில் இல்லை.

இதற்கு நேர்மாறாக உபநிஷத்துக்களிலும், பல கர்மாக்களைக் கூறியிருக்கின்றது. கர்மாநுஷ்டானங்களில் விசேஷமாகப் பயன் படுத்தப்படுகின்ற பெரும்பாலான மந்திரங்கள், தைத்திரீய உபநிஷத்திலிருந்தே காணக் கிடைக்கின்றன. ஒன்றுக்கொன்று விரோதமானது என்றால் இப்படியிருக்குமா?

அதாவது, ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் போக வேண்டும் என்பதே இதன் தாத்பரியம்.

கர்மாவை ஈஸ்வரார்ப்பணமாகச் செய்தால், அதுவே, ஞானத்துக்கு உபாயம் என்று ஸ்மிருதியான கீதையில் சொன்னதற்கு ஆதாரம் ஸ்ருதியான உபநிஷத்தில் இருக்கிறது.

தசோபநிஷத்துக்கள் என்ற பத்தில், முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிற ஈசாவாஸ்ய உபநிஷதத்தில் இதைத்தான் எடுத்தவுடனேயே உபதேசித்திருக்கிறது.

'நூறு வருஷம் வேத கர்மாக்களைச் செய்துக் கொண்டிரு. ஆனாலும் ஈஸ்வரார்ப்பண புத்தியோடு செய். அப்போது அது உன்னைக் கட்டிப்போடாது' என்கின்றது.

ஆகையால், ஞானகாண்டத்தில் வருகின்ற உபநிஷதம் என்றாலே, அது (காரியம் செய்யாமல் இருப்பது), கர்மாவுக்கு விரோதமானது என்று நினைத்தால் அது மிகவும் தவறு.

அதுப்போல, கர்மாதான் லக்ஷ்யம் என்று நினைத்து அதிலேயே நின்று விடக் கூடாது.

உலக சுபிக்ஷத்தை மனதில் கொண்டு, செய்யப் படுகின்ற வேள்விகள் சித்த சுத்திக்காகவும் செய்யபப்டுகின்றது என்ற புரிதலோடு, தேவதைகளை உபாஸிப்பது இருக்க வேண்டும். அதைவிடுத்து, வெறுமனே பலனைக் கருதி தேவதைகளை உபாசிப்பது கூடாது.

ஞானத்தை அடைந்து பரமாத்மாவைத்தவிர, இங்கு "நான்" என்ற ஒன்றில்லை, உலகம் என்ற ஒன்றில்லை. தேவதைகள் என்று யாரும் இல்லை என்கின்ற நிலையை அவசியம் அடைய வேண்டும்.

இந்த நிலையை அடைந்தால், வேதமும் “வேதம் இல்லாமல் போய்விடும்” என்று, அந்த வேதமே கூறுகிறது .

வேதம் என்பது என்ன?

சர்வேஸ்வரனின் சட்டம். அந்த ஈஸ்வரனின் சட்டத்தைப் பிரஜைகளான சகல ஜனங்களும் மதித்து நடக்க வேண்டும்.

ஆனால், ஞானியாகி சதா சர்வகாலமும் பரமாத்ம சத்யத்திலே ஒருவன் உள்ளும், புறமும் ஊறியிருக்கின்றபோது, அவனுக்கு மட்டும், இந்த வேத சட்டத்தைப் பார்த்துப் பார்த்துக் காரியங்களைச் செய்யவேண்டும் என்பது கிடையாது. அதற்குக் காரணம், அவனைப் பொருத்தவரை, அவன் இந்த உடலுடன் கூடிய தனித்த ஒருவன் கிடையாது. அவன் எல்லாமாக இருக்கின்ற ஈஸ்வர உடலகவே இருப்பதினால், அவனைப் பொருத்தவரை, ‘வேதம் வேதமில்லாமல் போகின்றது’ என்று கூறியிருக்கின்றது.

நாமும் கூடத்தான் சாஸ்திரத்தைச் சட்டமாக மதிப்பது கிடையாது. நமக்கும் வேதம் வேதமாக இல்லாமல்தான் இருக்கிறது. அதுப்போலவே, ஞானம் என்றால் என்ன? என்று கூடத்தான் நமக்குத் தெரியவில்லை.

உபநிஷத்துக்கள் என்கிற பரவித்தையில் கொண்டு சேர்க்கின்ற உபாயமே கர்மகாண்டம் என்பதைத் தெரிந்து கொள்ளாவிட்டால், வேதமானது (அதாவது, அதன்

கர்மகாண்டம்) மற்ற பாடங்களான வரலாறு, அறிவியல், புவியியல் என்ற அபர வித்தையாகத்தான் (அதாவது லௌகிக அறிவு நூலாகத்தான்) ஆகிவிடும்.


முண்டக உபநிஷத்தில் (அத்தியாயம் I .5) வேதத்தையும் அபரவித்தையோடு சேர்த்திருப்பதற்கு இதுதான் அர்த்தம்.

இதுப்போன்று, தாற்காலிக பயன்பாட்டோடு வேதத்தின் பயனை நிறுத்திக் கொள்பவனை உபநிஷதம் வெறும் பசுவைப் போன்றவன் என்கின்றது. அதாவது, அவனை ஒரு மிருகத்தைப் போன்றவன் என்றே கூறுகிறது.

## 15. தேவதைகளும், ஞானியும்

சகல தேவதைகளும் எதிலிருந்து தோன்றி உள்ளனவோ, அந்தப் பரமாத்மாவோடு ஐக்கியமாகி விடுகின்ற ஞானிக்கு, அந்தத் தேவதைகளும் அந்நியமில்லை.

பரமாத்மோவோடு பரமாத்மாவாக இவன் இரண்டறக் கலந்துவிட்ட பிறகு, தேவதைகளும் கூட இவனுக்குள் இருக்கின்றவர்களே.



தேவதைகளை உபாஸிக்கின்ற காலத்திலேயே இவனுக்கு இது அநுபவத்தில வராவிட்டாலும்கூட, 'நாம் வெளியே நமக்கு வேறாக, தேவதை என்று ஒன்றை உபாஸனை செய்கின்றோமே, அதுவும்கூட ஆத்மாவுக்கு அந்நியமானதில்லை' என்ற எண்ணம் இருந்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

பொதுவாக, புறத்திலே, செய்யும் செயல்களில் பிரிந்து, பிரிந்து வித்யாசமாகத்தான் செய்ய வேண்டுமென்றாலும், இந்த வித்யாசங்கள் எல்லாம் ஒடுங்கிப்போகிற ஒரே மூல தத்வத்தில் நாம் கடைசியிலே சேரவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருக்க வேண்டும்.

இப்படியில்லாமல், "எவனொருவன் தேவதையைத் தனக்கு முழுக்க வேறானது என்றே நினைத்து உபாஸித்திக் கொண்டிக்கிறானோ? அவன் சத்தியத்தைத் தெரிந்து கொள்ளாதவன், அவன் தேவர்களுக்குப் பசுப் போன்றவன்" என்று பிருஹதாரண்ய உபநிஷத்தில் (I.4.10) கூறப்பட்டிருக்கின்றது.

அதாவது, பசு என்று கூறுவதில், மனிதனுக்குள்ள ஆறாவது அறிவு இல்லாமல், வெறும் மிருகம் போல இருப்பவன் என்பது பொருள்.

நாம் எதற்குப் பசுவைப் போற்றுகிறோம்?

அது நமக்கு பால் கொடுக்கும் என்பதற்குத்தான்.

நமக்கு அது பாலைக் கொடுக்கின்றது என்பதற்காகத்தான் நாம் அதற்குப் புல்லும், வைக்கோலும், புண்ணாக்கும், பருத்திக் கொட்டையும் போடுகின்றோம்.

இதுப்போன்று, நாம் யக்ஞத்தில் ஹவிஸ்ஸுகளை ஹோமம் கொடுத்து தேவதைகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறோம். இவ்வாறு, நாம் செய்வதற்குப் பிரதிபலனாக தேவதைகளான பஞ்சபூதங்களும் நமக்கு மழை, தான்ய விருத்தி முதலான பல அநுக்ரஹங்களைச் செய்கிறார்கள்.

இந்தத் தேவதைகள் மனித இனத்தைவிட உயர்ந்தவர்களாக இருந்தாலும், இவர்களும் நிறைவான ஆனந்தத்தை அடைந்தவர்கள் கிடையாது.

மனித ஜன்மம் எடுத்து, அதன் மகத்துவத்தை அறிந்து, ஞானியாக ஆகிவிட்ட ஒருவன் அடைகிற பிரம்மானந்தத்தில் லக்ஷத்தில் ஒரு பங்கு கூட தேவர்களுக்குக் கிடையாது.

தைத்திரீய உபநிஷத்திலும் (II.8) பிருஹதாரண்யக உபநிஷத்திலும் (IV.3.33) மநுஷ்ய லோக ஆனந்தம், பித்ரு லோக ஆனந்தம், தேவலோக ஆனந்தம், அந்த தேவர்களுக்குள்ளேயே இந்திரனின் ஆனந்தம், பிருஹஸ்பதியின் ஆனந்தம், பிரஜாபதியின் ஆனந்தம் என்று ஒன்றைவிட ஒன்று நூறு மடங்கானது என்று ஒரு பெருக்கல் வாய்ப்பாடு சொல்லிக்கொண்டே போய், கடைசியில்தான்

பிரம்மானந்தம் என்ற ஞானியின் ஆனந்தத்தைக் கூறியிருக்கிறது.

ஆதலால், தேவர்களும் குறையுள்ளவர்கள்தான்.

அதோடு மட்டுமில்லாமல், எல்லாக் குறையையும் பூர்த்தி செய்கின்ற ஞானத்துக்காக அவர்கள் பாடுபடுவதும் இல்லை.

தங்களுக்கு மனிதர்களால் உண்டாகிற லாபங்களை எதிர்பார்த்துக் கொண்டு, நாம் செய்கிற யக்ஞம் முதலான உபாஸனைகளை எதிர்பார்த்துக் கொண்டுதான் தேவர்களும் இருக்கின்றார்கள்.

இதனால்தான், அவர்களுக்கு மனிதர்கள் ஞானிகளாகி விடுவதும் பிடிக்கவில்லை.

ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் இதைப்பற்றி வெளிப்படையாகவே கூறப்பட்டிருக்கின்றது.


'மனிதர்கள் ஆத்மாவை அறிந்து கொள்வது தேவர்களுக்குப் பிரியமாக இல்லை' என்று அந்த உபநிஷத்தில் (I.4.10) கூறப்பட்டிருக்கின்றது.

காரணம் என்ன?

ஆத்ம ஞானியாக ஆகிவிட்டால், அப்புறம் ஒருவன் தேவர்களைத் திருப்திப்படுத்துகிற யக்ஞாதி கர்மங்களைப் செய்யமாட்டான்.

நம்முடைய வீட்டு வேலைக்காரன் ஒருவன் இருக்கின்றான். அவனுக்கு குறைந்த சம்பளம் கொடுத்து வைத்திருக்கின்றோம். வேறு ஒரு புது வேலைக்காரன் வந்தால் அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டியது இருக்கும். இந்தச் சூழ்நிலையில், நம்முடைய வேலைக்காரன் மேலே படித்து பாஸ் செய்து, வேறு வேலைக்குப் போய்விட விரும்புகின்றான்.

அவன் தேர்வு எழுதப் போகின்றான் என்று வைத்துக் கொள்ளுங்கள்.



நாம் அவனை தேர்வில் தேறவேண்டுமென்று விரும்புவோமா? நிச்சயமாக மாட்டோம். அவன் தேறக் கூடாதென்றுதான் நினைப்போம்.

அப்படி, அவன் தேறிவிட்டால் அவனுக்குக் கர்வமும், கௌரவமும் வந்துவிடும். வேறு வேலைக்குப் போய் விடுவான். அவன் போய்விட்டால் அவனைப் போன்று குறைந்த சம்பளத்தில் ஒரு வேலைக்காரனும் நமக்குக் கிடைக்க மாட்டான்.

இதுப்போலத்தான் தேவர்களும் நினைக்கின்றார்கள்.

மனிதன் ஞானியாக உயர்ந்து விட்டால், தங்கள் உபாஸனையை விட்டுவிடுவது தேவர்களுக்குப் பிடித்தமில்லை! ஆகவே, ஞானி தேவர்களுக்குப் பிரியமில்லாதவன் என்றால், ஞானியாக இல்லாதவன்தான் அவர்களுக்குப் பிரியன் என்றாகி விடுகிறது.

ஆகையால், தேவர்களுக்குப் பிரியமானவன் அஞ்ஞானி, அறியாதவன் என்றாகிறது. அதனால்தான், மூர்க்கன் என்பதற்கே 'தேவனாம் ப்ரியன்', அதாவது, தேவர்களுக்குப் பிரியமானவன் என்று வியாகரணத்தில் இன்னொரு பெயரும் உள்ளது. இந்த பெயருக்கு உபநிஷத்தில் மூலம் இருக்கிறது.

சங்கர பகவத்பாதாள் பிரம்ம ஸூத்ர பாஷ்யத்தில் [I.2.8] பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒன்று என்றால், ஜீவாத்மாவின் கஷ்ட சுகங்கள் அனைத்தும் அந்த பரமாத்மாவுக்கும் உண்டாகும் என்று கூறுகின்றவனைப் பார்த்து, பதில் கூறும்போது, "நீ மிகவும் அசடாயிருக்கின்றாயே!" என்ற அர்த்தத்தில், 'தேவானாம் ப்ரியனாக இருக்கிறாய்!" என்கின்றார்.

இதம் தாவத் தேவானாம் ப்ரிய ப்ரஷ்டவ்ய:.

தேவர்களுக்குப் பிரியமானவன் – "தேவானாம் பிரியன்" என்ற பெயரைக் கேட்டவுடனேயே, ஏதோ மிகப்பெரிய நல்ல பெயர் எடுத்தது போன்றுத் தோன்றுகிறது. ஆனால், அதற்கு உண்மையான அர்த்தத்தில் பார்த்தால் 'அசடு' (அறிவற்றவனே) என்று பொருள் இருக்கிறது.

அதாவது, நல்ல புத்தி சாதுர்யமுள்ளவனாகவும், தேவர்களுக்குப் பிரீதியாகவும் உள்ள யாக, யக்ஞ கர்மாக்களை ஒருவன் செய்யாமல், எந்த மதத்தில் இருந்தாலும் கூட, அவன் வேதாந்தம் கூறுகின்றபடி ஞானியாக மாட்டான் என்ற அளவில், அவனையும் தேவானாம் ப்ரியன் என்று சொல்லுகிற வழக்கம் வந்திருக்கலாம். அல்லது, விஷயம் தெரியாத சிற்பியோ, அரசாங்க அதிகாரியோ, 'தேவானாம் ப்ரியன்' என்றால், ஏதோ நல்ல பெயராக இருக்கின்றதே, நல்ல

அர்த்தமாகத் தெரிகின்றதே என்று கருதி, அரசர்களின் சாஸனத்தில் அப்படி செதுக்கியிருக்கலாம்.

தேவானாம் ப்ரியனாக யக்ஞம் பண்ணிக் கொண்டிருப்பவன் ஞானியாக ஆகிக் கர்மாநுஷ்டானத்தை விட்டுவிட்டான் என்றால், 'நமக்கு ஒன்றும் கிடைக்காதே' என்று தேவதைகள் அவனுக்கு இடையூறுகள் செய்வார்கள்.

ரிஷிகளின் தவத்தைக் கலைப்பதற்கு ரம்பை, மேனகை, ஊர்வசி போன்ற நடன மாதுகளை, அனுப்பி வைப்பார்கள் என்று புராணங்களில் படித்திருக்கின்றோம்.

அதுப்போல, ஒருவன் ஆத்ம ஞானத்தை அடைந்து, ஞானியாகும்வரையில், அவன் அவசியம் தேவதைகளுக்குரிய கர்மாக்களைச் செய்து கொண்டிருக்கிறான்.

அதற்காக, அவர்களும் அவனுக்கு நல்லது செய்கிறார்கள். அதாவது, மழை பெய்யச் செய்கிறார்கள். விவசாயத்தை செழிக்காச் செய்து, உணவு பஞ்சத்தை போக்குகின்றார்கள். அதற்காக, ஹவிர்பாகம் அவர்களுக்கு அவசியம் கொடுக்க வேண்டும்.

நமக்கு இந்த உலகத்தில் ஒருவர் ஒரு உபகாரம் செய்தால், அதற்கான பிரதி உபகாரம் அவருக்கு நாம் செய்ய வேண்டுமல்லவா? அதைப்போல, மழையைத் தருகின்ற தேவதையான வருணனுக்கும் செய்யவேண்டும்.

அதற்காகத்தான் யக்ஞம் செய்கிறோம்.

யாராவது ஒரு பிராம்மணர் தேவதைகளுக்கு ஹவிர்பாகம் கொடுக்கிறார் என்றால், அவர் எல்லோருக்கும் பிரிதிநிதியாக இருந்து கொடுக்கிறார் என்று பொருள். அதாவது, மற்றவர்களுக்கும் சேர்த்து, யாரோ ஒருவர் வரி செலுத்து வதைப்போல, அவர் அதைச் செய்கின்றார் என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே ஞானியாகும் வரைக்கும் மனிதன் தேவதைகளுக்குப் பிரியமான கர்மாக்களைச் செய்து அவர்களுக்குப் பிரியமானவனாக இருக்கிறான்.

ஒரு பசுவிடம் கறந்து பால் பெற்றுக் கொள்வது போலத் தேவர்கள் அவன் மூலம் லாபத்தை அடைகிறார்கள். மாடு கறப்பது இல்லையானால், அந்த மாட்டால் மனிதனுக்கு என்ன பிரயோஜனம்?

அதுப்போல, மனிதன் பசுவைப்போல இருக்கிற வரையிலும், தேவதைகள் அவன்மீது பிரியமாக இருப்பார்கள். பசுவாக இல்லாமல் போனால், அவனை வெறுப்பார்கள்.

அதாவது, இரண்டு அர்த்தத்தின் படியும் மனிதன் தேவதைகளுக்குப் பசுவாக இருக்கிறான். அறிவில்லாதவன் என்ற அர்த்தத்தில் மாடு மாதிரி இருப்பதால் என்ற ஒரு அர்த்தத்திலும், கறவை நின்ற பசுவை நாம் விரும்பாதது போன்று, கர்மாவை நிறுத்தியவனைத் தேவர்கள் ரக்ஷிக்காமல் விடுவதாக, ஒரு அர்த்தத்திலும் பொருள் கொள்ளலாம்.

ஆனால், அத்தகைய தேவதை தனக்கு வேறல்ல! என்று அறிவதே இங்கு ஆத்மஞானம். அதற்குத்தான் வேதாந்தம் வழி சொல்லிக் கொடுக்கின்றது.

கர்மாவும் தேவதா உபாஸனையுங்கூட நின்று போய், அனைத்தும் தானாகிவிடுகிற நிறைந்த நிலைக்கு வழி சொல்கின்றது. அவனையே “ஞானி” என்றும் அழைக்கின்றது.

## 16. நான்கு வேதங்கள்

அப்படிப்பட்ட மஹா ஞானிகளினால் உபதேசிக்கப்பட்ட இந்த உயர் வேத மந்திரங்களை இன்றைய நவீன காலத்தில் புத்தகங்களாக அச்சிட்டு, அனைவரின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தனர் ஒரு சாரர்.

இந்த வேத மந்திரங்களை ஒரே கீர்த்தனமானாலும், ஒரே ராகமானாலும் அதிலே மஹா வைத்யநாதய்யர் பாணி, கோனேரிராஜபுரம் பாணி, சரப சாஸ்திரி பாணி என்று வெவ்வேறு வித்வான்களின் பாணிகளில் பாடப்பட்டு வந்திருக்கின்றது.

சில பாணியில் அதிகமான விளக்கங்களைக் கொண்டு பாடுகின்றபோது, சில ஸூக்தங்கள் ஒரு பாடத்திலேயே அதிகம் இருக்கும். ஒன்றுக்கொன்று மந்திரங்கள் முன்பின்னாகவும் இருக்கும்.

இத்தகைய பாடத்திட்டங்கள் ஒவ்வொன்றையும், ஒரு சாகை என்று சொல்வார்கள். அதாவது, சாகை என்றால் கிளை என்று பொருள்.

வேதம் என்ற விருக்ஷத்தில் (மரத்தில்) இவைகள் ஒவ்வொன்றும் ஒரு கிளை. அநேக கிளைகளுடன் கூடிய ஒரு மஹா விருக்ஷம் போன்று, இந்த வேதம் இருக்கின்றது.

இத்தனை சாகைகள் (கிளைகள்) இருந்தாலும், இவற்றை ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்ற நான்கும் காண்பதற்கு தனித்தனியாக இருப்பது போன்று காணப் பட்டாலும், ஒன்றை சேர்ந்ததாகவே பிரிக்கப்பட்டிருக்கின்றது.

தற்போதைய ஆராய்ச்சியாளர்கள் ரிக்வேதம் முந்தியது. யஜுர்வேதம் பிந்தையது என்றெல்லாம் கூறினாலும், சாஸ்திரப்படி எல்லாம் அனாதிதான். அனாதி என்றால், ஆதியும், அந்தமும் இல்லாதது. அதாவது, தோற்றமும், முடிவும் அற்றது என்று பொருள்.

சிருஷ்டித் தொடக்கத்திலேயே பிரம்மாவால் மானிடர்களுக்குக் கொடுக்கப்பட்டதான யக்ஞத்தில் நான்கு வேதங்களுமே பயன்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது, இந்த ரிக் வேதம் முந்தியது, அதர்வ வேதம் பிந்தியது என்ற ஆராய்ச்சிகளெல்லாம் தேவையற்றது.

இப்படித்தான் ஒரு வேத சாகை என்றால், அதில் காணப்படுகின்ற ஸம்ஹிதை, ப்ராம்மணம், ஆரண்யகம் என்ற பகுதிகளில், இதற்கு இது முந்தியது, இது பிந்தியது என்கின்ற ஆராய்ச்சியும் தேவையற்றது.

ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது வேதம்.

காலாதீதமான நிலையிலிருந்துக்கொண்டு திரிகாலங்களையும் பார்க்ககூடிய, ரிஷிகள் கண்டுபிடித்துக் கொடுத்தது வேதம் என்பதை நம்பிவிட்டோமானால், எந்தக் காலக் கணக்கு ஆராய்ச்சியும் அதற்குப் பொருந்தாது என்றும் அறிய வேண்டும்.

ரிக் வேதத்திலேயே பல இடங்களில் யஜுர் வேதம், ஸாம வேதம் முதலியவற்றைப் பற்றிய ஆதாரம் இருக்கிறது. ரிக்வேதம் பத்தாம் மண்டலத்தில் [தொண்ணூறாவது ஸூக்தமாக] வருகிற புருஷ ஸூக்தத்தில், இப்படி மற்ற வேதங்களைப் பற்றியும் வருகிறது.

இதனாலேயே வேதங்களில் ஒன்று முன்பே வந்தது என்பதுவும், இன்னொன்று பின்னால் வந்தது என்பதுவும் தவறு என்று தெரிகின்றதல்லவா?

ஒவ்வொரு சாகையிலும் சம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம் என்ற மூன்று கிளைகள் உண்டு. பொதுவாக 'வேத அத்யயனம்' என்னும்போது, இவற்றில் சம்ஹிதா

பாகத்தின் அத்யயனம் என்று மட்டும்தான் புரிந்துக் கொள்கின்றோம்.

ரிக்வேத சம்ஹிதையை மட்டும் புத்தகமாகப் போட்டு, அதற்கு "ரிக் வேதம்" என்று பெயர் கொடுத்தும் விடுகிறோம். ஏனென்றால் சம்ஹிதைதான் ஒரு சாகைக்கு ஆதாரமாக, உயிர் நாடியாக இருப்பது. சம்ஹிதா என்றால், "ஒழுங்குபடுத்திச் சேர்த்து வைத்தது" என்று பொருள்.

ஒரு வேதத்தின் தாத்பர்யம் என்னவோ, அதை அத்தனையையும் ஒழுங்கு மாறாமல் சேர்த்து மந்திரங்களாகக் கொடுத்திருப்பதுதான் சம்ஹிதை.

ரிக் வேத சம்ஹிதை அனைத்தும் செய்யுள் ரூபத்தில் இருப்பது ஆகும். பிற்காலத்தில் ஸ்லோகம் என்று கூறப்பட்ட செய்யுளுக்கே வேதகாலத்தில் 'ரிக்' என்று பெயர்.

பிற்கால ஸ்லோகத்திற்கும் வேத ரிக்குக்கும் பெரிய வித்யாசம் என்னவென்றால் ரிக்குகளைத்தான் ஸ்வரப்படி ஏற்றி, இறக்கி, அல்லது சமமாகச் சொல்ல வேண்டியிருப்பது ஆகும்.

'ரிக்' என்றால் ஸ்தோத்திரம் என்றும் பொருள்.

ரிக் வேத சம்ஹிதை முழுக்கவும் இப்படிப்பட்ட ஸ்தோத்திரங்களாகவே இருக்கிறது.

பல தேவதைகளைப் பற்றின ஸ்தோத்திரங்கள். ஒவ்வொரு ரிக்கும் ஒரு மந்திரம். ஒரு தேவதையைப் பற்றிப் பல ரிக்குகள் சேர்ந்து ஒவ்வொரு ஸூக்தமாக ஏற்பட்டிருக்கின்றன.

ரிக் வேதத்தில் – அதாவது சம்ஹிதையில் – பத்தாயிரத்து நூற்றி எழுபது [10170] ரிக்குகள் (மந்திரங்கள்) உள்ளன. [1028 ஸூக்தங்கள்]. அதாவது, ரிக் வேதத்தைப் பத்து மண்டலங்களாகவும், எட்டு அஷ்டகங்களாகவும் இரண்டு விதத்தில் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அக்னியைப் பற்றிய ஸூக்தத்தோடு ஆரம்பித்து, அக்னியைப் பற்றிய ஸூக்தத்தோடேயே அது முடிகிறது.

வேதங்களுக்குள்ளே தேவதா ஸ்தோத்ர ரூபமாயிருப்பது ரிக் வேதம். அதில் உபக்ரமம் (ஆரம்பம்), உபஸம்ஹாரம் (முடிவு) இரண்டிலும் அக்னியைச் சொல்லியிருப்பதால், அக்னி உபாஸனைதான் வேத தாத்பர்யம் என்றே கொள்கிறவர்களும் உண்டு.

“அக்னி” என்றால், ஆத்ம சைதன்யத்தின் பிரகாசம் (ஸத்ய தத்துவத்தைப் பற்றிய அறிவொளி) என்றால், இதுவும் சரியே ஆகும்.

ரிக் வேதத்தின் கடைசி ஸூக்தம் அக்னியைப் பற்றியதாக இருந்தாலும் அதில்தான் இப்போது தேசியகீதம் என்று நாம் கூறுவதற்கும் மேலாக, சர்வ தேசத்திற்குமான ஒற்றுமைப் பிரார்த்தனை இருக்கின்றது.

"எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து ஏக மனதாக இணைந்து ஆலோசனை செய்யட்டும். எல்லோருக்கும் ஒரே லக்ஷ்யமாக இருக்கட்டும். எல்லா ஹ்ருதயங்களும் அன்போடு ஒன்று சேரட்டும். இப்படி ஏகோபித்த எண்ணத்தோடு எல்லாரும் ஆனந்தமாக இருக்கட்டும்" என்று ரிக் வேதம் முடிகிறது.

'யஜ்' - வழிபடுவது – என்ற தாதுவிலிருந்து யஜுஸ், யக்ஞம் என்ற இரண்டும் வந்திருக்கின்றன.

'ரிக்' என்றாலே எப்படி ஸ்தோத்திரம் என்று அர்த்தமோ, அதுப்போல, 'யஜுஸ்' என்றாலே, யக்ஞ சம்பந்தமான வழிபாட்டுக் காரியக்ரமத்தை விவரிப்பது என்று பொருள்.

இதற்கேற்றாற்போல, ரிக்வேதத்திலுள்ள ஸ்துதி ரூபமான மந்திரங்களை யக்ஞம் என்கின்ற காரியத்தில் பொருத்திக் கொடுப்பதே யஜுர்வேதத்தின் முக்கியமான லக்ஷ்யமாகவும் இருக்கிறது.

ரிக்வேதத்தில் உள்ள பல மந்திரங்கள் இதிலும் கூறப்படுகின்றன. அதோடு கூட, உரை நடையில் யக்ஞம் முதலான வேத கர்மாநுஷ்டானங்களைக் கூறுகின்றது.

வாயால் (வாக்கினால்) ஸ்தோத்திரம் செய்ய ரிக்வேதம் பயன் படுத்தப்படுகின்றது. காரியத்தில் (செயலால்) வழிபாடு செய்ய யஜூர்வேதம் முக்கியமாக பயன்படுகின்றது.

ஒவ்வொரு வேதத்திலும் பல சாகைகள் இருக்கின்றது போன்றே, யஜூர் வேதத்திலும் தனக்குள்ளேயே அதிக மாறுபாடுகளைக் கொண்ட இரண்டு தனி வேதங்களாகவே பிரிந்திருக்கின்றது.

இந்த இரண்டு பிரிவுகளுக்கு "சுக்ல யஜூர் வேதம்", "கிருஷ்ண யஜூர் வேதம்" என்று பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

'சுக்லம்' என்றால் வெளுப்பு.

'கிருஷ்ணம்' என்றால் கறுப்பு.

சுக்ல யஜூர் வேத சம்ஹிதைக்கு "வாஜஸநேயி சம்ஹிதா" என்றும் பெயருண்டு.

"வாஜஸநி" என்பது, சூரியனுடைய பெயர்.

சூரியனிடமிருந்தே யாக்ஞவல்கிய ரிஷி இந்த ஸம்ஹிதையை உபதேசிக்கப் பெற்று, இந்த பூலோகத்துக்குக் கொண்டு வந்ததால், இதற்கு “வாஜஸநேயி ஸம்ஹிதா” என்ற பெயர் ஏற்பட்டது.

இதைப்பற்றி ஒரு பெரிய கதை உண்டு.

சுருக்கமாகச் சொன்னால், யாக்ஞவல்கியருக்கு முன்னால் யஜுர் வேதம் ஒன்றாகத்தான் பூலோகத்துக்கு வெளி வந்திருந்தது. அந்த யஜுர் வேதத்தை வைசம்பாயனரிடமிருந்து யாக்ஞவல்கியர் கற்றுக்கொண்டார்.



அடுத்து, யாக்ஞவல்கியர் சூரியனை குருவாக ஏற்றுக்கொண்டு சரணாகதி செய்தார்.

அனந்தமான வேதங்களில் அதுவரை இந்த பூலோகத்திற்கு வராதிருந்த இன்னொரு வித யஜுர் வேதத்தை சூரிய பகவான் அவருக்கு உபதேசித்தார்.

அது வாஜஸநேயி என்றும், சுக்ல யஜுஸ் என்றும் பெயர் பெற்றது.

இது ‘சுக்லம்’ (வெள்ளை) என்பதால், ஏற்கெனவே வைசம்பாயனர் என்ற ரிஷியால் உபதேசித்து இருப்பதினால், அதற்கு மாறாக ‘கிருஷ்ண’ (கருப்பு) யஜுர்வேதம் என்று பெயர் பெற்றது.

கிருஷ்ண யஜுர் வேதத்தில் சம்ஹிதை, பிராம்மணம் என்று முழுக்கத் தனித்தனியாகப் பிரிக்காமல், சம்ஹிதா மந்திரங்களுக்கு அங்கங்கேயே ப்ராம்மண பாகங்களைச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு கலந்து போனதை ‘கிருஷ்ண’ என்று சொல்வது வழக்கமானதாலேயே இந்த வேதத்திற்கு அப்படிப் பெயர் வந்ததாகவும், கலக்காமல் தனித்தனியே மீதமிருப்பதை ‘சுக்லம்’ என்று சொல்லும் வழக்கமாக அந்தப் பெயர் வந்ததாகவும் வேதத்தைக் கற்றுக் கொடுக்கின்ற ஆச்சாரியர்கள் கூறுகின்றார்கள்.

அத்தனை தேவதைகளுக்குமான ஸ்தோத்திரங்களைக் கொண்டது ரிக்வேதத்தின் பெருமை. அதோடு மட்டுமின்றி, சமூக வாழ்க்கை முறைகளையும், வாழும் வழிகளையும் அதுவே நன்றாக எடுத்துக்கூறுகின்றது.

உதாரணமாக, சூரியனுடைய புத்திரியின் கல்யாணத் தைப்பற்றி அது கூறியிருப்பதை வைத்துத்தான், நம்முடைய திருமணத்திற்கு தேவையான சடங்குகளே உருவாகி இருக்கின்றது.



புரூரவஸ் – ஊர்வசி ஸம்வாதம் [உரையாடல்] போன்ற பல நாடக விசேஷமுள்ள பகுதிகளும் ரிக்வேதத்தில் உண்டு.

பிற்காலத்தில் காளிதாஸாதிகள் இவற்றை விரிவுபடுத்தி எழுதியிருக்கிறார்கள்.

உஷஸ் [விடியற்காலையின் அதிதேவதை] பற்றிய வர்ணனை போன்ற ரிக் வேதப் பகுதிகளை, மிக உத்தமமான கவிதை என்று கவிஞர்கள் கொண்டாடுகிறார்கள்.

வேதங்களில் முதலாவதாக ரிக் வேதத்தை வைத்த தாலேயே, அதற்கு ஒரு ஏற்றம் இருக்கத்தானே வேண்டும்?

யஜுர் வேதத்தில் உள்ள கர்மா காரியங்களுக்கும், சாம வேதத்தில் பாடப்படுகின்ற (சாம) கானம் இவற்றிற்கும் தாயாக ரிக்வேத ரிக்குகள்தான் இருக்கின்றன.

கர்ம யோகத்தை நன்றாக அமைத்துக் கொடுத்திருப்பது யஜுர் வேதத்தின் பெருமை.

தர்ச பூர்ண மாஸம், ஸோம யாகம், வாஜபேயம், ராஜஸூயம், அச்வமேதம் முதலான அனேக யக்ஞங்களைப் பற்றியும், பலவிதமான சத்ர யாகங்களைப் பற்றியும் விரிவாக நமக்குத் தெரிவிப்பது கிருஷ்ண யஜுஸில் உள்ள தைத்ரீய சம்ஹிதைதான்.

அதோடு கூட, ரிக் வேதத்தில் இல்லாத சில உயர்ந்த ஸ்தோத்திர பூர்வமான மந்திரங்களும் இதில்தான் வருகின்றன.

உதாரணமாக, இப்போது பெரும்பாலும் வழக்கத்தில் கூறப்படும் “ஸ்ரீருத்ரம்” யஜுர் வேதத்திலிருந்து எடுத்ததுதான்.

ரிக் வேதத்திலும் பஞ்சருத்ரம் என்று ஐந்து ஸூக்தங்களை எடுத்திருந்தாலும், இன்று 'ஸ்ரீருத்ரம்' என்ற மாத்திரத்தில் யஜுர் வேதத்தில் வருவதைத்தான் குறிப்பிடுவதாயிருக்கின்றது.

ரிக் வேதத்திலுள்ள 'புருஷ ஸூக்தத்'திலேயே சில மாறுதல்களோடு யஜுர் வேதத்திலும் வருகின்றது.

இன்று 'புருஷ ஸூக்தம்' என்றால், பொதுவாக யாஜுஷமானதுதான் (யஜுர் வேதத்திலுள்ளது) என்று மாற்றப்பட்டுள்ளது.

அவ்வாறே, அத்வைதிகள் விஷயத்திலும் யஜுர் வேதத்துக்கு ஒரு விசேஷம் இருக்கிறது. எந்த சித்தாந்தமானாலும் அதற்கு ஸூத்ரம், பாஷ்யம், வார்த்திகம் என்ற மூன்றும் இருக்க வேண்டுமென்பது மரபு.

ஸூத்ரம் என்பது சித்தாந்தத்தை ரத்தினச் சுருக்கமாகச் சொல்வது. பாஷ்யம் என்பது அதற்கு விரிவுரை. இந்த விரிவுரையையும் விளக்குவதுதான் வார்த்திகம் எனப்படும்.

அத்வைத சித்தாந்தத்தில் "வார்த்திககாரர்" என்றால், ஸுரேச்வராச்சார்யார் என்ற ஆதிசங்கரரையே குறிக்கும்.

அவர் எந்த பாஷ்யத்துக்கு வார்த்திகம் செய்தார்?

உபநிஷத்துக்களை ஸூத்திரத்தின் ஸ்தானத்தில் வைத்தால், ஆசார்யார் (சங்கரர்) அந்த உபநிஷத்துக்களுக்கு பாஷ்யம் செய்தார்.

பிரம்ம ஸூத்ரம் என்பதற்கும் பாஷ்யம் செய்தார்.

இந்த பாஷ்யங்களை மேலும் விளக்கியே, ஆசார்யாரின் நேர் சிஷ்யரான ஸுரேச்வரர் வார்த்திகம் எழுதினார். அப்படி எழுதும்போது, ஆசார்யார் செய்த, பத்து உபநிஷத பாஷ்யங்களையும் எடுத்துக்கொள்ளாமல், அவற்றில் இரண்டை மட்டுமே எடுத்துக்கொண்டு, அவற்றுக்கு வார்த்திகம் எழுதினார். அந்த இரண்டும், தைத்ரீய உபநிஷத்தும், பிருஹதாரண்ய உபநிஷத்தும் ஆகும்.

இவற்றில் தைத்திரீயம் கிருஷ்ண யஜுஸைச் சேர்ந்தது, பிருஹதாரண்யகம் சுக்ல யஜுஸைச் சேரந்தது. ஆக இரண்டுமே யஜூர் வேதம்தான்.

அடுத்து, தசோபநிஷத்துக்கள் என்கிற முக்கியமான பத்து உபநிஷத்துக்களில் முதலாவதான 'ஈசாவாஸ்யம்', முடிவான 'ப்ருஹதாரண்யகம்' இரண்டுமே சுக்ல யஜூர் வேதத்தில் உள்ளவையே என்பதும் இந்த வேதத்துக்கு ஒரு பெருமை.

'சாமம்' என்றால், மனதை சாந்தப்படுத்துவது அல்லது சந்தோஷப்படுத்துவது என்று பொருள்.

சாம–தான–பேத–தண்டம் என்கின்றபோது, முதலில் எதிரியைக்கூட அன்பினாலே நண்பனாக்கிக் கொள்வதற்கு ‘சாமம்’ என்று பெயர் இருக்கிறது. இவ்வாறு, தேவதா சக்திகளையும், பரமாத்மாவையும் நமக்கு அந்நியோந்நியமாக செய்வது சாம வேதம் ஆகும்.

பொதுவாக, ஒருவரை சந்தோஷப்படுத்த என்ன வழி?

அன்றைய காலங்களில் ஒருவரை (அரசர்களை) சந்தோசமடையச் செய்ய முகஸ்துதி செய்வது என்று கூறி, அவரைப் புகழ்ந்து பாடுவார்கள் அல்லவா?

அதுப்போல, ஸ்தோத்திரம் ஸ்துதி செய்தால் இறைவனைச் சந்தோஷப்படுத்துகிறது. அல்லது பாட்டு பாடினால் சந்தோஷப்படுத்துகிறது. ஸ்தோத்திரத்தையே பாட்டாகவும் கானம் செய்து விட்டால், இரட்டிப்பு சந்தோஷம் உண்டாக்கும் அல்லவா?

இதுபோன்றுதான் ரிக் வேதத்தில் ஸ்துதிகளாக இருந்த மந்திரங்களில் பலவற்றையே சாமகானமாக ஆக்கி. பாட்டாகப் பாடுவது சாம வேதம் ஆகும்.

இதுவும், ரிக் வேத மந்திரமேதான்.

ஆனால், ரிக் வேதத்தில் முன்பே சொன்ன உதாத்தம், அநுதாத்தம் போன்ற ஸ்வரங்கள் மட்டுமே இருக்க,

சாமத்திலோ கானமாகவே அவற்றை நீட்டி, நீட்டிப் பாட விதிகள் செய்யப்பட்டிருக்கின்றது.

அதன்பிறகு தோன்றிய ஸப்த ஸ்வர சங்கீதத்துக்கு மூலமாக, இந்த சாம கானம்தான் இருந்தது.

சாமகானத்தினால் ஸகல தேவதைகளும் பிரீதி அடைந்து விடுகிறார்கள். யக்ஞங்களில் ஆஹூதி தருவது மட்டுமின்றி, உத்காதா என்ற சாமகானம் பாடுவதினாலேயே, பாடப்படுகின்ற தேவதையின் அநுக்கிரஹம் சித்திக்கின்றது.

ஸோம யக்ஞங்கள் என்பதாக, ஸோம ரஸத்தைப் பிழிந்து, ஆஹூதி கொடுத்துப் செய்கின்ற யக்ஞங்களுக்கு சாமகானம் மிகவும் முக்கியமாகும்.

அவைகளும், ரிக்வேத மந்திரங்களேதான் என்றாலும், ஆத்ம சிரேயஸையும், தேவதா ப்ரீதியையும் விசேஷமாக அளிக்கக்கூடிய கானரூபத்தில் அமைந்து விட்டதால், சாம வேதத்துக்குத் தனிச் சிறப்பு கூறப்படுகின்றது.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே, கீதையில் "வேதானாம் சாமவேதோஸ்மி" என்கிறார்:

"வேதங்களுக்குள் நான் சாமவேதமாக இருக்கிறேன்" என்கின்றார்.

நல்லது, கெட்டது எல்லாமே அவர்தான். இருந்தாலும் தன்னுடைய தெய்வீகம் விசேஷமாகப் பிரகாசிக்கின்ற

இடங்களை அர்ஜுனனுக்குக் கூறிக்கொண்டு வரும்போது, சாம வேதத்தையே குறிப்பிட்டுக் கூறுகிறார்.

அம்பாளுக்கு "சாம கான ப்ரியா" என்றே லலிதா ஸஹஸ்ர நாமத்தில் ஒரு பேர் வருகின்றது. 'ரிக்வேத ப்ரியா', 'யஜுர்வேத ப்ரியா' என்று இல்லை.

அவ்வாறே, சியாம சாஸ்திரிகளும் "சாம கான விநோதினி" என்று மீனாக்ஷியைப் பாடியிருக்கிறார். சிவ அஷ்டோத்திரத்தை எடுத்துக் கொண்டால், அங்கேயும் "சாம ப்ரியாய நம:" என்று வருகின்றது.

'சந்தோக சாமம் ஓதும் வாயான்' என்று தேவாரமும் போற்றுகிறது. ஈஸ்வரன், அம்பாள், விஷ்ணு என்று மூன்று – பேரையும் 'ரத்ன த்ரயம்' என்பதாக, தேவதைகளின் உச்சஸ்தானத்தில் இருக்கப்பட்டவர்களென்று அப்பய தீக்ஷிதர் நடுநிலை நாட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட மூவருக்கும் சாம வேத ஸம்பந்தமே விசேஷமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

அதர்வன் என்றால் புரோஹிதர் என்று அர்த்தம்.

அந்தப் பெயரிலேயே ஒரு ரிஷி இருந்தார். அதர்வா என்ற அந்த ரிஷியின் மூலம் பிரகாசமானது அதர்வ வேதம்.

அதிலே பலவிதமான ஆபத்துக்களைப் போக்கிக் கொள்வதற்கும், சத்ருக்களை அழிப்பதற்கும் மந்திரங்கள்

இருக்கின்றன. இதில் பாடல்களும், உரை நடையும் ஆக இரண்டும் கலந்து இருக்கின்றன.

மற்ற வேத மந்திரங்களுக்கும் இந்த பிரயோஜனம் உண்டு. ஆனால் மற்ற வேதங்களில் இல்லாத அநேக தேவதைகள், இன்னம் கோரமான பல வித ஆவிகள் இவற்றைக் குறித்தும் மந்திரங்கள் அதர்வத்தில்தான் இருக்கின்றன.



மாந்திரீகம் என்று இப்போது சொல்கிற அநேக விஷயங்கள் அதர்வ வேதத்திலிருந்து வந்தவைதான். மிகவும் உயர்ந்த தத்வங்களைக் கொண்ட மந்திரங்களும் அதர்வத்தில் இருக்கின்றன.

உலகத்தில் காணப்படுகின்ற சிருஷ்டி விசித்ரத்தை எல்லாம் கொண்டாடுகிற 'ப்ருத்வீ ஸூக்தம்' இந்த வேதத்தில் தான் வருகின்றது. யக்ஞத்தை மேற்பார்வை இடுகின்ற பிரம்மாவை அதர்வ வேதத்துக்குப் பிரதிநிதியாகச் கூறியிருப்பது இதற்கு ஒரு பெருமை.


இதன் சம்ஹிதா பாகத்தின் அத்யயனம் வடக்கே மிகவும் தேய்ந்து போய் தெற்கே அடியோடு இல்லாமல் போய்விட்டாலும் பிரஸித்தமான பத்து உபநிஷத்துக்களுக்குள், 'பிரச்ணம்', 'முண்டகம்', 'மாண்டூக்யம்' என்ற மூன்று உபநிஷத்துக்கள் அதர்வ வேதத்தைச் சேர்ந்தனவாகவே உள்ளன.

முமுக்ஷுவானவன் (ஞான சாதகன்) மோக்ஷம் பெறுவதற்கு மாண்டூக்ய உபநிஷத் ஒன்றேபோதும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட உயரிய உபநிஷதம் அதர்வ வேதத்தைச் சேர்ந்ததாகவே இருக்கிறது.

பிற்காலத்தில் அதர்வ அத்யயனம் விட்டுப் போனாலும், நீண்ட காலம் அது வழக்கில் இருந்திருக்கிறது என்று கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது.

மந்திரங்களுக்குள் மஹா மந்திரமாக விளங்கும் காயத்ரி மூன்று வேத சாரம் என்று கருதப்படுகிறது. மூன்று வேதம் என்பதால் இங்கே அதர்வத்தைச் சேர்க்கவில்லை என்றாகிறது.

இதனால் அதர்வ வேதத்தை அத்யயனம் பண்ணுமுன் புனருபனயனம் (இரண்டாம் முறை பூணூல் கல்யாணம்) அணியவேண்டும் என்ற அபிப்பிராயமும் இருக்கின்றது.



பொதுவாக பிரம்மோபதேசத்தில் உபதேசிக்கப்படும் காயத்ரிக்கு "த்ரிபதா காயத்ரி" என்று பெயர்.

அது மூன்று பாதம் உடையதாக இருப்பதால் இப்படிப் பெயர். ஒவ்வொரு பாதமும் ஒரு வேதத்தின் சாரமாகும்.

அதர்வ வேதத்துக்கு வேறு காயத்ரி உண்டு.

இப்போது அதர்வ வேதிகள் என்று யாரும் இல்லாதபோது, அந்த வேதத்தை மற்ற வேதக்காரன் அத்யயனம் பண்ண வேண்டுமானால், இன்னொரு முறை உபநயனம் செய்து கொண்டு அதர்வ காயத்ரியை உபதேசம் வாங்கிக் கொண்டு, பிறகு அந்த வேதத்தைக் கற்க வேண்டும்.

மற்ற மூன்று வேதங்களைச் சேர்ந்தவர்கள் அந்த மூன்றில் மற்ற இரண்டை அத்யயனம் செய்ய வேண்டு மானால், இப்படி புனருபனயனம் செய்துக் கொள்ள வேண்டியது இல்லை. ஏனென்றால், இந்த த்ரிவேதிகளுக்கும் பொதுவாக ஒரே காயத்ரி இருக்கிறது.

நான்கு வேத சம்ஹிதைகளும் சேர்ந்து 20,500 மந்திரங்கள் உள்ளன. சாமவேத சம்ஹிதையில் ரிக் வேத ஸ்தோத்திரங்கள் உள்ள 'அர்ச்சிக' என்ற பாகமும், 'கானம்' என்ற பாகமுமாக இரண்டு பிரிவுகள் உள்ளன.

கானங்களில் க்ராம கானம், அரண்ய கானம், ஊஹ கானம், ஊஹ்ய கானம் என்ற நான்கு வகைகள் உள்ளன.

இத்தகைய உயர் வேதங்களை ஒருவன் கற்றறிந்து, அதன் வழி நின்று, இருப்பதெல்லாம் இறைவனே! என்ற உண்மையை அறிந்து, எந்த உயிர்களிடத்திலும், தேவதைகளிடத்திலும் வேறுபாடு காண முடியாத மன நிலையில், அந்த இறைவனாகவே சதா அவனுடன் இணைந்து

இருக்கின்ற ஜீவன் முக்தனை உருவாக்குகின்ற உயர்ந்த வேதத்தை அறியாத மதமானாலும், மனிதனாலும் அதனால் பயன் ஒன்றுமில்லை.

அன்று முதல், இன்று வரை அந்த சர்வேஸ்வரனால் கொடுக்கப்பட்ட வேதத்தையே வேதநாயகனின் வாக்காக எடுத்துக் கொண்டு, அதைக் கொடுத்த சர்வேஸ்வரனையும் மதித்து, அந்த வேதத்தில் கூறப்பட்டுள்ள கர்மகாண்டத்தையும், ஞானகாண்டத்தையும் அறிந்து அதன்படி சிறப்பாக வாழுகின்ற உயர்ந்த ஞானிகளும் இந்த பாரதத்தில் இருக்கத்தான் செய்கின்றனர்.

அவர்கள் வழியே, உன்னதமான வழி என்பதை அறிந்த ஒரு சில மக்களும் அந்த ஞானிகளின் பின்னால் சென்றுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

ஓம் தத் சத்!



"பிரம்மாக்னியில் ஆத்மாவை ஹவிஸாகத் தர வேண்டும். ஸம்யமம் என்ற புலனடக்க அக்னியில், இந்திரிய நுகர்ச்சிகளை ஹோமம் செய்ய வேண்டும். பஞ்சப்பிராணன்களை ஒன்றிலொன்று ஹோமம் பண்ணவேண்டும்"

நூறு வருஷம் வேத கர்மாக்களைச் செய்துக் கொண்டிரு. ஆனாலும், ஈஸ்வரார்ப்பண புத்தியோடு செய். அப்போது அது உன்னைக் கட்டிப்போடாது.

நாம் வெளியே நமக்கு வேறாக, தேவதை என்று ஒன்றை உபாஸனை செய்கின்றோமே, அதுவும்கூட ஆத்மாவுக்கு அந்நியமானதில்லை.

"வேத கர்மாவும், உபாஸனையும் ஒருவனை ஞானத்தில் கொண்டுபோய் சேர்க்கா விட்டால், அதனால் ஒரு உபயோகமும் இல்லை"